
# திரிபோஷா நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் மதிப்பீடு




**அறிக்கை இலக்கம்: COM/2019/TRI/01**

---

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**கம்பனிகள் கணக்காய்வுப் பிரிவு**

## உள்ளடக்கம்


| | | | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 1. | நிறைவேற்று பொழிப்பு | | 1 - 3 |
| 2. | அறிமுகம் | | |
| | 2.1 | பின்புலம் | 4 - 8 |
| | 2.2 | திரிபோஷா உற்பத்தி செயற்பாடுகள் | 8 - 9 |
| | 2.3 | திரிபோஷாவை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் | 10 |
| | 2.4 | உலகத்தில் ஏனைய நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற போஷணை மேலதிக நிகழ்ச்சித் திட்டம் | 11 - 12 |
| | 2.5 | தொடர்புடைய நிறுவனங்கள் | 13 - 14 |
| | 2.6 | கணக்காய்விற்கான அதிகாரபலம் | 14 |
| | 2.7 | கணக்காய்விற்கான தலைப்பை தெரிவு செய்தல் | 14 |
| | 2.8 | கணக்காய்வின் விடயப்பரப்பு | 15 |
| | 2.9 | கணக்காய்வின் நோக்கம். | 16 - 17 |
| 3. | விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள் | | |
| | 3.1 | ஆரம்ப திட்டமிடல் | 18 |
| | 3.2 | திரிபோஷா உற்பத்திற்கு தேவையான மூலப்பொருட்களை பெறல் | 18 - 24 |
| | 3.3 | திரிபோஷா உற்பத்தி | 24 - 31 |
| | 3.4 | திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தின் தரக் கட்டுப்பாடு | 31 - 44 |
| | 3.5 | திரிபோஷா உற்பத்தியை பகிர்ந்தளித்தல் | 44 - 50 |
| | 3.6 | திரிபோஷாவை போக்குவரத்து செய்தல், | 51 |
| | 3.7 | திரிபோஷா உற்பத்தி மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த மேற்பார்வை | 51 - 53 |
| 4. | பரிந்துரை | | 54 - 57 |

| | | நிழற் படம் | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 01 | - | உற்பத்தி பிரிவின் கட்டிடங்களின் உள்ளே புறாக்களின் நடமாடல் | 25 |
| 02 | - | உற்பத்தி சுற்றாடலில் புறாக்களின் அசுத்தங்கள் காணப்பட்டமை. | 25 |
| 03,04 | - | சோயா அவரை மேற்தோலை அகற்றும் பிரிவில் அகற்றப்படுகின்ற பகுதிகள் உற்பத்தி பிரிவில் குவிந்துள்ள விதம். | 26 |
| 05 | - | பொருத்தமான தலைக்கவசம் மற்றும் பாதணிகள் அணியாமல் இருந்த உற்பத்தி பிரிவின் ஊழியர்கள். | 27 |
| 06 | - | திரிபோஷா உறையில் உற்பத்தித் திகதி மற்றும் காலாவதியாகும் திகதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தமை. | 31 |
| 07,08 | - | தானிய களஞ்சிய தாங்கிகளில் தண்ணீர் தேங்கி நின்றமை. | 33 |
| 09 | - | பூர்த்தி உற்பத்தி தாங்கி. | 40 |
| 10,11 | - | கலவைகள் பொலித்தீனால் தயாரிக்கப்பட்ட குழாய் ஊடாக அனுப்புதல். | 40 |
| 12 | - | தற்காலிக திட்டமாக திரிபோஷா பொதியிடல் பக்கட்டுக்களை பயன்படுத்துதல். | 41 |
| 13 | - | விவசாயிகள் பசளை உறையிட்டிருந்த உறைகளில் தானியங்களை பரவுவதற்காக பயன்படுத்தப்பட்ட விதம். | 43 |
| 14 | - | தானியம் இயந்திரத்திற்கு உட்படுத்துகின்ற இடம். | 43 |

| | | | |
|---|---|---|---|
| 15 | - | திரிபோஷா பக்கட்டுக்கள் தரையில் போடப்பட்டுள்ள விதம். | 48 |
| 16 | - | திரிபோஷா பக்கட்டுக்கள் தரையில் போடப்பட்டுள்ள விதம். | 48 |
| 17 | - | திரிபோஷா களஞ்சியம் | 48 |
| 18 | - | நிலத்தில் விசிறப்பட்டுள்ள திரிபோஷா பக்கட்டுக்கள் | 49 |
| 19 | - | பலகைத்தட்டில் ஏனைய பொருட்கள் வைக்கப்பட்டிருந்தமை | 49 |
| 20,21 | - | பலகைத்தட்டில் ஏனைய பொருட்கள் வைக்கப்பட்டிருந்தமை | 50 |
| 22 | - | தடுப்பூசி மருந்து அறை மற்றும் தாய்மார்கள் வைத்தியர்களை சந்திப்பதற்கு காத்திருக்கின்ற சுற்றாடலிலும் திரிபோஷ களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை. | 50 |

| | | அட்டவணை | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 01 | - | நிதிச் செயலாற்றல் | 6 |
| 02 | - | உள்ளபடியான உற்பத்தி, வருடாந்த திரிபோஷ உற்பத்தி திட்டங்களுடன் ஒப்பீடு செய்தல். | 7 |
| 03 | - | உலகத்தில் ஏனைய நாடுகளில் அமுல்படுத்தப்படுகின்ற போஷணை மேலதிக உற்பத்தி தொடர்பான விபரம் | 11 - 12 |
| 04 | - | உற்பத்தி செயற்பாடற்று காணப்பட்ட காலமும், காரணமும். | 29 |
| 05 | - | போசணை மூலக்கூறுகளின் பற்றாக்குறை | 34 |
| 06 | - | போசணை மூலக்கூறுகளின் மிகைகள் | 34 |
| 07 | - | திரிபோஷாவின் உள்ளடக்கப்பட்ட உலக சுகாதார அமைப்பின் நியமங்களுடன் ஒப்பிடல் | 37 |

| | | இணைப்பு | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 01 | - | உற்பத்தி இலக்கினை அடைந்து கொள்ளல் | 58 |
| 02 | - | களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்கள் | 59 – 60 |
| 03 | - | திரிபோஷா பகிர்ந்தளித்தல் மற்றும் நலனாளிகளை தெரிவு செய்தல் தொடர்பான பொது சுற்றறிக்கை 01/04-201 | 61 - 62 |
| 04 | - | சுகாதார வைத்திய நிலையங்களினால் திரிபோஷா கையேற்றல் அறிக்கை உரிய பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமை | 63 |
| 05 | - | **MBI** அறிக்கையின் உள்ளபடியான இருப்பு மற்றும் எஞ்சிய உள்ளபடியான இருப்பு அறிக்கைகளில் குறிப்பிடப்படாமை. | 64 |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கை பொது மக்களை மந்த போசணையற்ற, சுபீட்சமான, அபிமானமிக்க ஆரோக்கியமான மக்களாக மாற்றியமைக்கும் தலையாய நோக்கை அடிப்படையாகக் கொண்டு ஆச்சரியமிக்க நாளைய உலகை வெற்றிகொள்ளும் எமது தாய்நாட்டில் சுபீட்சமான, நற்பண்புடைய இலங்கை தேசத்தின் எதிர்காலத்தை முன்னிட்டு பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பூரணமாக உள்நாட்டு விவசாயிகளை வலுப்படுத்தும் வழங்குனர்களை சக்திபெறச்செய்து உயர் தரம்மிக்க போஷாக்குடைய மேலதிக உணவு வகைகளை சிறப்பாக சுகாதார பாதுகாப்புடன் தயாரித்து, பொதியிட்டு பூர்த்திசெய்து எதிர்பார்க்கப்படும் பயன்பெறுநருக்கு ஏற்புடையவாறு தொடர்ச்சியாக வழங்குதல் எனும் பணிக்கூற்றை நிறைவேற்றுவதற்கு லங்கா திரிப்போஷா லிமிடெட் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

போஷணை தேவையுடன் கூடிய எமது நாட்டின் மக்களுக்கு பொருத்தமான போஷணை மேலதிக உணவொன்றை வழங்கும் நோக்குடன் கனடாவின் கெயார் நிறுவனத்தின் உதவியுடன் திரிபோஷா உற்பத்தி முதலாவதாக 1973 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சிற்குச் சொந்தமான முழுமையாக அரச கம்பனியாக 2010.09.07 ஆம் திகதி லங்கா திரிபோஷா லிமிடெட் என்ற பெயரில் இந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2010.06.23 ஆம் திகதிய 10.∵1236.∵415.∵039 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் மூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அது சுகாதார அமைச்சின் கீழ் வருகின்ற அரச கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது.

திரிபோஷா உற்பத்திற்கு தேவையான மூலப் பொருட்களாக சோளம் மற்றும் சோயா அவரை என்பவையே அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றது. அது முறையே 66 சதவீதம் மற்றும் 30 சதவீத அளவாகும். இந்த தானிய வகைகள் உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலையின் கீழ் விவசாய சங்கங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக இதற்கு தேவையான பால்மா, கனியுப்புக்கள் மற்றும் விட்டமின் போன்ற ஏனைய பொருட்களும் வழங்கப்பட்டு இயந்திர பொறிமுறையில் திரிபோஷா மேலதிக உணவு உற்பத்தி செய்யப்படுகின்றது. திரிபோஷ மேலதிக உணவை உயர்ந்த போசணைத் தரத்துடன் பூரணமாக இருந்ததுடன் இதில் காபோவைதரட் 61.9 சதவீதமும், புரதம் 20.06 மற்றும் 7.8 கிராம் கிராம் கொழுப்பும் அடங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக கனியுப்புக்கள், விட்டமின்கள் மற்றும் நார் சத்துக்கள் போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பிரதான உணவுகளின் மூலம் அடைந்து கொள்ள முடியாத போசணை குறைகபாடுளை நிவர்த்தி செய்வதற்கு திரிபோஷா பேருபகாரமாக இருந்ததுடன், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் போசணைக் குறைபாடுள்ள சிறுவர்களுக்கு மாதமொன்றுக்கு 750 கிராம் பக்கட்டுக்கள் 02 வீதம் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் பரந்து வாழ்கின்ற ஒரு மில்லியனுக்கும் அண்ணளவான இந்த திரிபோஷா நலனாளிகளுக்குத் தேவையான திரிபோஷ மேலதிக போசாக்கை ஜா-எல கப்புவத்தையில் அமைந்துள்ள திரிபோஷா உற்பத்திக்கூடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதிலும் உள்ள சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக தோட்டங்களின் மக்களுக்கும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் 09

நிலையங்களுக்கும் திரிபோஷா மேலதிக உணவு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. மேலும், திரிபோஷா உதவிக்கு மேலதிகமாக சந்தையினை இலக்காகக் கொண்டு ''சூபோஷா'' என்ற பெயரில் மேலதிக உற்பத்தியொன்று நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

190 ஊழியர்களுக்கு அண்ணளவான அளவில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற இந்த அரச கம்பனி கடந்த சில ஆண்டுகளில் 2015 இல் வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 0.41 மில்லியனையும், 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 0.46 பில்லியன் 0.63 பில்லியன் மற்றும் 0.78 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தையும் உழைத்திருந்தது.

வருடாந்தம் அரசாங்கம் ரூபா 03 பில்லியன் அளவில் செலவினப் பொறுப்பொன்றை செய்திருந்த போதிலும், இலங்கை சிறுவர்கள் மந்த போசனையில் இருக்கின்ற நாடுகளுக்கு இடையில் இரண்டாவது இடத்தை பிடித்திருந்ததாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் அறிக்கைகளின் பிரகாரம் அறிக்கையிடப்பட்டமை மற்றும் இலங்கையில் மந்த போசணையின் காரணமாக சிறுவர் மரணங்கள் அறிக்கையிடப்பட்டமை தொடர்பாக ஊடகம் மற்றும் இணைய தளம் ஊடாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள கலந்துரையாடல்கள் இந்த அரச கம்பனியின் தற்போதைய செயற்படுநிலையை மதிப்பீடு செய்யும் வகையில் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த செயலாற்றல் கணக்காய்வில் நோக்கமானது உற்பத்திக்கு தேவையான நிதியத்தை வழங்குவதற்காக ஆரம்ப திட்டமொன்றை தயாரித்தல், திரிபோஷ உற்பத்திக்கு பூர்த்தி மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளல், திரிபோஷா உற்பத்தியின் தரத்தினை கட்டுப்படுத்துதல் மற்றும் திரிபோஷாவை பகிர்ந்தளித்தல் என்பவற்றுடன் கம்பனியில் மனித மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்துல் என்ற பணிகளை பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானதும், செயற்திறனாகவும் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பான மதிப்பீடாகும்.

உற்பத்திக்குத் தேவையான நிதியத்தை வழங்கும் போது நிறுவனத்திற்கு தேவையான மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக ஒன்று மெற்றிக் தொன் 4000 வீதம் இயலளவை உடைய இரண்டு சைய்லோக்களை நிர்மாணிப்பதற்கு நிறுவனம் திட்டமிட்டிருந்ததுடன், அதற்கு தேவையான நிதி ஏற்பாடு 2018 ஆம் ஆண்டின் பாதீட்டில் கோரப்பட்ட போதிலும், அதற்காக நிதி கிடைத்திருக்கவில்லை.

திரிபோஷா உற்பத்திக்காக மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் போது பெறுகைகள் காலாவதியாகியமையின் காரணமாக உற்பத்தி இழத்தல், விரிவான திட்டமொன்று காணப்படாமை, வழங்குனர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படாமை மற்றும் வழங்குனர்கள் வழங்குகின்ற மூலப் பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளையும் காண முடியாதிருந்தமை முக்கியமாகக் காணப்பட்டது.

2017, 2018, 2019 யூன் வரையான காலத்திற்குரிய பரிசோதனையின் போது நிறுவனத்தினால் அவர்களின் உற்பத்தி இலக்கு அடைந்து கொள்ளப்படாதிருந்ததுடன், மூலப் பொருள் பற்றாக்குறை, ஊழியர் பற்றாக்குறை பிரதான காரணமாக இருந்தது. உணவு உற்பத்தி நிறுவனமொன்றின் திட்டம் மற்றும் வெளியிடல் திட்டம் (னுநளபைெ ரூ டியலழரவ) உற்பத்தியின் தரத்தை பேணும் வகையில்

திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், திட்டமிடும் போது அதில் நலிவுகள் காணப்பட்டன.

உற்பத்தியில் அடங்கியுள்ள போஷாக்கின் உள்ளடக்கம் உரிய மாதிரிகளுடன் கவனத்தில் கொள்ளும் போது 100 கிராம் திரிபோஷாவில் அடங்க வேண்டிய போஷாக்கு உள்ளடக்கங்களில் பற்றாக்குறை மற்றும் மிகைகள் அவதானிக்கப்பட்டமையை காணக்கூடியதாக இருந்தது. உற்பத்தி பிரிவின் தரத்தை கட்டுப்படுத்தும் போது மூலப் பொருள் சுத்தப்படுத்தும் செயற்பாடுகள், மூலப் பொருள் கலவையிடல் மற்றும் பொதியிடல் மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற கட்டங்களின் போது உற்பத்தியின் தரத்திற்கு பாதிப்பு ஏற்படக் கூடியதை காணக்கூடியதாக இருந்தது.

மேலும் நிறுவனத்தினால் தமது உற்பத்திக்காக ஐளுழு 22000 மற்றும் ர்யுஊஊஆ என்ற தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு மதியுரை நிறுவனத்தின் மூலம் 2017.02.14 ஆம் திகதி ஆலோசனை பெறப்பட்டிருந்த போதும், அதில் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்ததன் பின்னர் அந்த தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

திரிபோஷா பகிர்ந்தளித்தல் கோரிக்கையின் பிரகாரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் வெளிச் சந்தைகளின் இலக்கைக் கொண்டு சூபோஷா உற்பத்திக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் பற்றாக்குறையான சந்தர்ப்பங்களில் சூபோஷா உற்பத்தியை நிறுத்தி திரிபோஷா உற்பத்திக்குரிய மூலப் பொருட்களை ஈடுபடுத்திய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படவில்லை. மூலப் பொருள் காணப்படுகின்ற அளவில் திரிபோஷா மற்றும் சூபோஷா உற்பத்திகள் இரண்டும் மேற்கொள்ளப்படுவதுடன், திரிபோஷ உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. மேலும், திரிபோஷா பகிர்ந்தளிக்கும் போது 01-04.ஃ.2016 திரிபோஷா பகிர்ந்தளித்தல் தொடர்பான சுற்றறிக்கைகளின் நியதிகளுக்கு புறம்பான சந்தர்ப்பங்கள் சிகிச்சை நிலையங்களின் ஆவணங்கள் பராமரித்து செல்வதிலுள்ள குறைபாடு, திரிபோஷாக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் வகையில் சுகாதார வைத்திய சேவை உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் திரிபோஷாவை களஞ்சியப்படுத்துவதில் குறைபாடுகளைக் காணக்கூடியதாக இருந்தன.

திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றலை பேணிச்செல்வதற்காக போதியளவான திட்ட முறைமையொன்று காணப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல், உற்பத்தி செய்தல், பகிர்ந்தளித்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் போன்ற செயற்பாடுகள் மேற்பார்வையின்றி பேணிச் செல்லப்பட்டமையின் காரணமாக உற்பத்தி தடைப்படல் மற்றும் உரிய தரப்பினருக்கு குறித்த நேரத்தில் வழங்க முடியாமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றல் வெற்றிகரமான மட்டத்தில் காணப்படாதிருந்தமை வெளிப்படையாக தென்பட்டது. குறைபாடுகளை மாற்றியமைப்பதன் மூலம் இலங்கை பொது மக்களை மந்த போசணையற்ற, சுபீட்சமான, அபிமானமிக்க ஆரோக்கியமான மக்களாக மாற்றியமைக்கும் நிறுவனத்தின் நோக்கு அரசாங்கத்தின் அபிலாசைகளை அடைவதற்கு முடியுமாக உள்ளது.

## 2. அறிமுகம்

### 2.1 பின்புலம்

போஷாக்கு நிரம்பிய நோயற்ற மக்களை உருவாக்கும் தேசிய இலக்கினை நிறைவேற்றும் வகையில் திரிபோஷ மேலதிக உணவு உற்பத்திகளை பகிர்ந்தளித்தல் இலங்கை திரிபோஷா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற முன்னுரிமை தேசிய செயற்பாடாகும்.

சுகாதார அரமைச்சின் கீழ் 1973 ஆம் ஆண்டில் விஷேட செயற்திட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்ட திரிபோஷா நிகழ்ச்சித் திட்டம் 2010.09.17 ஆம் திகதி முழுமையான அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனியாக இலங்கை திரிபோஷா லிமிட்டெட் என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கம்பனி சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நடாத்திச் செல்லப்படுகின்ற கம்பனியொன்றாக இருந்ததுடன், அதன் செயற்படுநிலை பணிப்பாளர் சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. சுகாதார வளங்களால் மந்தபோசனையின்றிய மக்களை உருவாக்கும் நோக்காகக் கொண்டு சுகாதார சிகிச்சை நிலையங்களின் மூலம் இலங்கையில் பரந்து வாழ்கின்ற சகல கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதுக்கு குறைவான, பாரம் குறைந்த பிள்ளைகளை நோக்காகக் கொண்டு இலவசமாக திரிபோஷ பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

திரிபோஷா உற்பத்திக்கு சோளம், சோயா அவரை, விற்றமின், கனிப் பொருட்கள் மற்றும் பால்மா என்பன ஈடுபடுத்தப்படுவதுடன், அதில் காபோஹைதரைட், புரதம், கொழுப்பு மற்றும் ஏனைய போசணைப் பதார்த்தங்கள் அடங்கிய மிகவும் போஷாக்குமிக்க மேலதிக உணவாகும். திரிபோஷா உற்பத்தியின் மூலம் மேலதிக போஷாக்குத் தரத்தை நலன் பெறும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் சுகாதார வளமுடைய மக்களை உருவாக்குதல் ஆரம்ப நோக்கமாகும். பிரதானமாக மூலப் பொருளான சோயா அவரை மற்றும் சோளம் உள்நாட்டு ரீதியில் வழங்குவதன் மூலம் உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவித்து அவர்களின் பொருளாதார நிலையினை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதும் திரிபோஷா கம்பனி மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தை அரசாங்கத்திற்கு கையேற்கும் சந்தர்ப்பத்தின் போது ஒட்டு மொத்த இலங்கையர்களினதும் தேவையில் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் அளவினையே அடைந்து கொள்ள முடியுமாக இருந்தது. இது தொடர்பாக விஷேட கவனத்தை செலுத்தி 100 சதவீத நலனாளிகளின் தேவையினை வழங்குவதற்கு புதிய இயந்திர பொறிமுறையொன்றை பொருத்துதல் 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அது மாத்திரமன்றி இலவசமாக வழங்கப்படுகின்ற திரிபோஷா அளவினை நலனாளிகளுக்கு வழங்கியதன் பின்னர் ஏற்படுகின்ற மிகை திரிபோஷ அளவை சூபோஷ என்ற பெயரில் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும் இலங்கை திரிபோஷா லிமிட்டெட் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அ. இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் நோக்கம்

இலங்கை பொது மக்களை மந்த போசணையற்ற, சுபீட்சமான, அபிமானமிக்க ஆரோக்கியமான மக்களாக மாற்றியமைத்தல்.

## ஆ. இலங்கை திரிபோஷா லிமிடட் நிறுவனத்தின் பணிக்கூற்று

ஆச்சரியமிக்க நாளைய உலகை வெற்றிகொள்ளும் எமது தாய்நாட்டில் சுபீட்சமான, நற்பண்புடைய இலங்கை தேசத்தின் எதிர்காலத்தை முன்னிட்டு பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பூரணமாக உள்நாட்டு விவசாயிகளை வலுப்படுத்தும் வழங்குனர்களை சக்திபெறச்செய்து உயர் தரம்மிக்க போஷாக்குடைய மேலதிக உணவு வகைகளை சிறப்பாக சுகாதார பாதுகாப்புடன் தயாரித்து, பொதியிட்டு பூர்த்திசெய்து எதிர்பார்க்கப்படும் பயன்பெறுநருக்கு ஏற்புடையவாறு தொடர்ச்சியாக வழங்குதல்.

## இ. இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் பிரதான நோக்கம்

போஷாக்கு தேவையுடைய எமது நாட்டு மக்களுக்கு பொருத்தமான போஷாக்குமிக்க மேலதிக உணவொன்றை வழங்குதல்.

## ஈ. இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் பணிகள்

ை. கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், சிறு பிள்ளைகள் போன்றவர்களின் மேலதிக உணவொன்றாக பயன்படுத்துகின்ற திரிபோஷா மேலதிக உணவை அதிக தரப்பரிசோதனையின் கீழ் சுத்தமாகவும், சிறந்த நியமத்துடனும் தயாரித்தல்.

ைை. சுகாதாரம் தொடர்பான அதிக கவனத்துடன் பொதியிடல்.

ைைை. சோளம், சோயா அவரை என்பவற்றை உள்நாட்டு விவசாயிகளிடம் இருந்து சலுகை விலையின் கீழ் விவசாய கம்பனிகள் ஊடாக கொள்வனவு செய்தல்.

ைஎ. திரிபோஷா பக்கட் சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்ற பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகங்களுக்கு பகிர்ந்தளித்தல்.


## 2.1.3 நிதி மீளாய்வு

### 2.1.3.1 நிதி செயலாற்றல்

கம்பனியின் கடந்த நான்கு வருடங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

| | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா பில்லியன்) | 1.776 | 1.469 | 2.184 | 2.807 |
| உற்பத்தி கிரயம் (ரூபா பில்லியன்) | 1.793 | 1.393 | 2.073 | 2.656 |
| மொத்த இலாபம் ∴ (நட்டம்) (ரூபா பில்லியன்) | (0.167) | 0.76 | 0.111 | 0.151 |
| மொத்த இலாபம் ∴ (நட்டம்) சதவீதம். ( %) | (1) | 5.17 | 5.08 | 5.38 |
| ஏனைய வருமானம் (ரூபா பில்லியன்) | 0.026 | 0.020 | 0.028 | 0.038 |
| செயற்பாட்டு செலவினம் (ரூபா பில்லியன்) | 0.05 | 0.05 | 0.076 | 0.111 |
| வரிக்கு முன் இலாபம் ∴ (நட்டம்) (ரூபா பில்லியன்) | (0.41) | 0.46 | 0.63 | 0.78 |
| வரிக்கு முன் இலாபம் ∴ (நட்டம்) சதவீதம். (%) | (2.0) | 3.13 | 2.88 | 2.78 |

**அட்டவணை இல. 01- நிதிச் செயலாற்றல்**




**2.1.3.2 உள்ளபடியான உற்பத்தி வருடாந்த திரிபோஷா உற்பத்தி திட்டம். (யுரெயட ீசழனரஉவழைெ ீடயெ) உடன் ஒப்பிடல்**

| வருடம் ∴ காலப்பகுதி | உற்பத்தி திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி (மாஸ்டர் பேக்) | உள்ளபடியான உற்பத்தி (மாஸ்டர் பேக்) | உள்ளபடியான உற்பத்தி எதிர்பாாக்கப்பட்ட உற்பத்தியின் சதவீதமாக (மூ) |
|---|---|---|---|
| 2017 | 1,047,612 | 543,955 | 52 |
| 2018 | 846,792 | 529,476 | 63 |
| 2019 யூன் 30 வரை | 613,506 | 236,278 | 38.5 |

அட்டவணை இலக்கம் 02 - உள்ளபடியான உற்பத்தியை வருடாந்த திரிபோஷா உற்பத்தியுடன் ஒப்பீடு செய்தல்.

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த உற்பத்தி திட்டம் (யுஉவரயட ஁சழனரஉவழைெ ஁டயெ) அடைந்து கொள்ளல் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அது 2017 ஆம் ஆண்டில் 52 சதவீதம் ஆகவும், 2018 ஆம் ஆண்டில் 63 சதவீதமாகவும், 2019 ஆம் ஆண்டின் யூன் 30 வரை 38.5 சதவீதமாகவும் காணப்பட்டது. எதிர்பார்த்த உற்பத்தியை உள்ளபடியான உற்பத்தியுடன் ஒப்பிடும் போது திட்டத்தினை அடைந்து கொள்ளல் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறு குறைவடைந்தமைக்கான காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை செய்வதற்கு முகாமைத்துவம் எடுத்த படிமுறைகள் தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

## 2.2 திரிபோஷா உற்பத்தி செயற்பாடுகள்


சோளம், சோயா, விற்றமின் கனிப் பொருட்கள் மற்றும் பால்மா என்பன நிறுவனத்திற்கு கிடைத்ததன் பின்னர் பிரதான மூலப் பொருள் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்படுகின்றது. திரிபோஷா மற்றும் சூபோஷா உற்பத்திக்கான சோளம் மற்றும் சோயா பிரதான களஞ்சியத்திலிருந்து அதன் அருகிலே உள்ள சுத்திகரிக்கும் இயந்திரத்தில் முதலாவதாக உட்படுத்தப்படுவதுடன், அதில் சுத்திகரித்தல் இயந்திரம் ஊடாக சோளம் மற்றும் சோயா என்பவற்றில் காணப்படுகின்ற மணல், பாரம் குறைந்த சோளம், சோயா மற்றும் ஏனைய கழிவுகள் காற்றின் மூலம் சுத்தம் செய்யப்பட்டு 2 சய்லோஸ் இல் களஞ்சியப்படுத்தப்படுகின்றது.

அதன் பின்னர், சுத்தம் செய்யப்பட்ட சோயா விதையை தோல் அகற்றுவதற்காக சோயா விதை தோல் அகற்றும் இயந்திரத்திற்கு அனுப்பப்படுகின்றது. அந்த இயந்திரத்தின் மூலம் சோயா விதைகளின் வெளித்தோல் அகற்றப்பட்டு, அந்த தோல் அகற்றப்பட்ட விதைகள் வேறொரு தாங்கியொன்றில் களஞ்சியப்படுத்தப்படுகின்றது. அதன் பின்னர் சுத்திகரிப்பு செய்யப்பட்ட சோளம் மற்றும் தோல் அகற்றப்பட்ட சோயா விதைகள் என்டர்சன் இயந்திரத்திற்குள் அனுப்பப்படுகின்றது.


அதன் போது முதலாவதாக சோளம் மற்றும் சோயா விகிதாசாரத்திற்கேற்ப கலவை செய்யப்படுகின்றது. விகிதாசார கலவையிடப்பட்ட சோளம் மற்றும் சோயா விதைகள் அதன் பின்னர் என்டர்சன் இயந்திரத்தில் உள்ள அரைக்கும் இயந்திரத்திற்கு அனுப்பப்படுகின்றது. அதன் போது அரைக்கப்பட்ட சோளம் மற்றும் சோயா களவை பின்னர் என்டர்சன் இயந்திரத்தின் மூலம் பரவப்படுகின்றது. அதன் பின்னர் பரவப்பட்ட சோளம் மற்றும் சோயா கலவைகளில் சிறிய துண்டுகள் வேறுபிரிக்கப்படுவதுடன், உலரவைக்கும் இயந்திரத்தின் மூலம் அந்த கலவைகள் உலர்த்தப்படுகின்றது. உலரவைக்கப்பட்ட அந்த கலவை அதன் பின்னர் மீண்டும் அரைக்கும் இயந்திரத்தின் ஊடாக அரைப்பதற்கு உட்படுத்தப்படுகின்றது.

அதன் பின்னர் அரைக்கப்பட்ட சோளம் மற்றும் சோயா கலவைக்கு பால்மா, கனிப் பொருள் மற்றும் விற்றமின் என்பன ஒன்று சேர்க்கப்படுகின்றது. அதன் பின்னர் அந்த கலவை 04 பிரதான களஞ்சிய தாங்கிகளில் களஞ்சியப்படுத்தப்படுவதுடன், அந்த களஞ்சிய தாங்கி ஊடாக பொதியிடல் பிரிவிற்கு திரிபோஷா, சூபோஷா பொதியிடுவதற்காக விநியோகிக்கப்படுகின்றது. திரிபோஷா உற்பத்தி செயற்பாடுகள் கீழே உள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி செயற்பாட்டு வரைபடம்



## 2.3 திரிபோஷா பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள்



## 2.4 உலகத்தின் ஏனைய நாடுகளில் அமுல்படுத்தப்படுகின்ற போஷணை மேலதிக நிகழ்ச்சித் திட்டம்

உலகத்தில் ஏனைய நாடுகளில் திரிபோஷா போன்ற போஷாக்கு மேலதிகத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் அதில் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற சுபர் சீரியல் (ளுரிநச ஊநசநயட) மற்றும் சுபர் சீரியல் பிளஸ் (ளுரிநச ஊநசநயட ீடரள) என்ற பெயரிலான உற்பத்தியொன்று முக்கியமான இடத்தை பிடிக்கின்றது. இந்த உற்பத்தியில் பெல்ஜியம் மற்றும் ருவண்டா இல் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு தேவையின் பிரகாரம் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஏனைய நாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

இந்த சுபர் சீரியல் உற்பத்தி கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காகவும், சுபர் சீரியல் பிளஸ் உற்பத்தி 05 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்காகவும் வழங்கப்படுகின்றது. இந்த உற்பத்தி சோளம் மற்றும் சோயா கலவை உற்பத்தியாக இருந்ததுடன், 6 மாதம் முதல் 5 வருடங்கள் வரையான சிறுவர்களுக்காக வழங்கப்படுகின்றது. இந்த உற்பத்தி தாய்ப்பாலூக்கு மேலதிகமான உணவாக வழங்குவதற்கு உற்பத்தி செய்யப்படுவதுடன், இது தாய்ப்பாலூக்கு நிகராக இல்லை.

இந்த உற்பத்தி சோளம், சோயா அவரை சீனி, கொழுப்புடன் பால்மா, சோயா அவரை எண்ணெய், விற்றமின் மற்றும் கனிப்பொருட்கள் போன்ற மூலப் பொருட்களை ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக பாகிஸ்தானில் அச்சா மம் (யுஉாய ஆயஅ) என்ற பெயரில் போஷாக்கு மேலதிகமொன்று 6 மாதங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான சிறுவர்களுக்காக வழங்கப்படுகின்றது. இந்த உற்கத்தி கடலை, மரக்கறி எண்ணெய், பால்மா, சீனி, விற்றிமின் மற்றும் கனியுப்புக்கள் சோயா லெசித்தீன் என்ற மூலப் பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. அந்த உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மாதிரிகள் | சுபர் சீரியல் பிளஸ் (ளுரிநச ஊநசநயட ீடரள) | சுபர் சீரியல் (ளுரிநச ஊநசநயட) | அச்சா மம் (யுஉாய ஆயஅ) |
|---|---|---|---|
| இலக்கிடப்பட்ட குழு | 06 மாதங்கள் - 05 வருடங்களுக்கு இடையிலான சிறுவர்கள். | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் மந்த போசணையுடைய நபர்கள். | 06 மாதங்கள் - 05 வருடங்களுக்கு இடையிலான சிறுவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| பிரதான மூலப் பொருட்கள் | சோளம், சோயா அவரை, பால்மா, சீனி, சோயா எண்ணெய், விற்றமின் மற்றும் கனியுப்புக்கள் | சோளம், சோயா அவரை விற்றமின் மற்றும் கனியுப்புக்கள் | கடலை, மரக்கறி எண்ணெய், பால்மா, சீனி, விற்றமின் மற்றும் கனியுப்புக்கள் சோயா லெசித்தீன். |
| நாளாந்த அளவு | 200 கிராம் | 200-250 கிராம் | 100 கிராம் |
| போஷாக்கு | 787 முஉயடஇ 33 கிராம் புரதம், 20 கிராம் கொழுப்பு | 752 – 939 முஉயடஇ 31-38 கிராம் புரதம் 16-20 கிராம் கொழுப்பு | 520 மஉயடஇ 13 கிராம் புரதம், 29 கிராம் கொழுப்பு |
| வழங்கப்படும் கால எல்லை | 60 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | வழங்கப்படுகின்ற நபர்களின் அடிப்படையில் மாறுபடும். | 60 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை |
| உற்பத்தி காலாவதியாகுவதற்கு உள்ள காலம் | 18 மாதம் | 12 மாதம் | 24 மாதம் |
| பொதியிடல் | முதலாம் - 1.5 கி. கிராம் உறை இரண்டாம் - (1.5 கி. கிராம் ஒ 10 ஸ்ரீ 15 கி. கிராம் அல்லது 1.5 கி. கிராம் ஒ 12ஸ்ரீ18 கி. கிராம்) | 25 கி. கிராம் உறை. | 100 கிராம் வீதமாக 105 சிறிய பக்கட்டுக்கள் உள்ளடங்கிய பெட்டி ஒன்று |

அட்டவணை இலக்கம் 03 - உலகத்தில் ஏனைய நாடுகளில் அமுல்கபடுத்தப்படுகின்ற போஷணை மேலதிக உற்பத்தி தொடர்பான விபரங்கள்

## 2.5 தொடர்புடைய நிறுவனங்கள்

இந்த செயலாற்றல் கணக்காய்வை செய்யும் போது கீழே குறிப்பிடுகின்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவி நிறுவனங்களாக இனங்காணப்பட்டிருந்தது.

| | நிறுவனம் | நிறைவேற்றப்படுகின்ற பணிகள் |
|---|---|---|
| அ. | சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய துறை அமைச்சு | • திரிபோஷா உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.<br>• திரிபோஷா உற்பத்திக்கு தேவையான நிதி ஏற்பாட்டை பாதீட்டின் மூலம் வழங்கி திரிபோஷா நிறுவனத்திற்கு வழங்குதல்.<br>• திரிபோஷா பகிர்ந்தளித்தலை மேற்கொள்ளல் |
| ஆ. | சிறுவர்கள் மற்றும் தாய் சேய் சிகிச்சை நிலையங்கள். | • திரிபோஷா நலனாளிகளுக்கு திரிபோஷாவை மாதாந்தம் பகிர்ந்தளித்தல் மற்றும் திரிபோஷா பயன்பாடுகள் தொடர்பான உரிய நலன் பெறுனர்களுக்கு அறிவித்தல். |
| இ. | தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் ஜீன்டெக் (புஜவேநுஊர்) நிறுவனம், ளுஊஊ நிறுவனம். | • திரிபோஷா உற்பத்திக்கு ஈடுபடுத்தும் மூலப் பொருள் (சோயா அவரை, சோளம்) மற்றும் திரிபோஷா தரத்தை பரிசோதனை செய்தல் மற்றும் மூலப் பொருட்களின் நச்சுப் பொருட்கள் அடங்குகின்றா என பரீட்சித்தல்.<br>திரிபோஷாவிற்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களில் இனப்பொருக்க வேறுபாடுகள் செய்யப்பட்டு அல்லது இனப்பொருக்கங்கள் தெரிவுபடுத்தப்பட்டுள்ளதா என பரீட்சித்தல்.<br>திரிபோஷாவிற்காக பயன்படுத்தப்படுகின்ற விற்றமின் வகைகளின் தரத்தை பரீட்சித்தல். |
| ஈ. | இலங்கை நியமங்கள் நிறுவனம் | • திரிபோஷா உற்பத்திக்கு ஈடுபடுத்தப்படுகின்ற மூலப்பொருள் (சோயா அவரை, சோளம்) மற்றும் திரிபோஷா தரத்தை பரிசோதனை செய்தல் மற்றும் சிறுவர்களின் உணவுகளுக்குரிய நியமங்களை செய்தல் மற்றும் ளுடுயுளு தரச் |

சான்றிதழை விநியோகித்தல்.

| | | |
|---|---|---|
| உ. | விவசாய திணைக்களம் | • சோளம் மற்றும் சோயா அவரை விதைகள் மற்றும் விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை உரிய செயற்திட்டங்களுக்காக வழங்குதல். |
| ஊ. | உலக உணவு அமைப்பு | • திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்குதல் மற்றும் திரிபோஷா தொழில் முயற்சி தொடர்பாக அறியாத ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதன் தரத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பல்வேறு ஆலோசனைகளை வழங்குதல். |

### 2.6 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரமும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 3(1)(ஈ), 5(2) மற்றும் 12(ஏ) பிரிவுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 2.7 கணக்காய்விற்கான தலைப்பை தெரிவு செய்தல்

அ. இலங்கை சிறுவர்கள் மந்த போசணையில் வாழ்கின்ற நாடுகளுக்கு இடையில் தெற்காசியாவில் இரண்டாவது இடத்திற்கு உட்பட்டிருந்ததாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் அறிக்கைகளின் பிரகாரம் அறிக்கையிடப்பட்டமை மற்றும் இலங்கையில் மந்தபோசணையின் காரணமாக சிறுவர் மரணங்கள் அறிக்கையிடப்பட்டமை தொடர்பாக ஊடகங்கள், இணைய தளங்கள் மூலம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள கலந்துரையாடல்களின் பிரகாரம் இந்த பிரச்சினையை இந்த உணவின் மூலம் பூர்த்தி செய்து கொள்வதற்குள்ள இயலுமையை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என மதிப்பிடல்.

ஆ. திரிபோஷா பகிர்ந்தளித்தல் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாமையினால் பிரச்சினைகள் காணப்பட்டமை.

இ. வருடாந்தம் அரசாங்கத்திற்கு ரூபா 03 பில்லியன் அளவில் செலவினப் பொறுப்பு ஒன்றை செலவிட வேண்டியிருந்தமை.

ஈ. திரிபோஷா உற்பத்தி செயலாற்றலை மதிப்பிடல்

## 2.8 கணக்காய்வின் விடப்பரப்பு

அ. கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான அதியுயர் நிறுவனங்களுக்கான சர்வதேச அமைப்பினால் (இன்டோசாய்) விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி மற்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 உறுப்புரையின் ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் எமது செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. எங்களின் செயலாற்றல் கணக்காய்வின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்காக குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் எவ்வளவு தூரம் அடையப்பட முடியும், அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளல் மற்றும் தொடர்பாக ஆபத்துக்கள் என்ன என்பதை தீர்மானிப்பதற்காக அடிப்படையாக நிறுவனம் அவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாக எங்களால் அனுபவமொன்று பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆ. எங்களின் பணிகளை முழுமையாக திட்டமிட்டு கணக்காய்வு திட்டத்தில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. செயலாற்றல் கணக்காய்வின் இடையே எங்களது கண்டுபிடிப்புக்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் இது மாற்றமடைய முடியும். அதன் பிரகாரம் எங்களால் கணக்காய்வு விடயப் பரப்புக்களுக்கான அடிப்படையை புதுப்பித்தல் மற்றும் கணக்காய்விற்காக எடுக்கப்படுகின்ற கால நேரங்கள் மற்றும் மனித வளங்களின் அடிப்படையில் செயலாற்றல் கணக்காய்வின் போதியளவான தெரிவு நடைமுறைகள் வரையறுக்கப்படுகின்றது.

இ. 2017 முதல் 2019 யூன் 30 வரை இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் திரிபோஷா உற்பத்திக்கு மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை ஆய்வு செய்தல் உலகத்தின் ஏனைய நாடுகளில் அமுல்படுத்தப்படுகின்ற போஷாக்கு மேலதிக நிகழ்ச்சித் திட்டத்தை ஆய்வு செய்வதற்காக தெரிவினை தெரிவு செய்யும் போது கீழே குறிப்பிடப்படுகின்ற முறையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல் தொடர்பான சுகாதார அமைச்சின் பெறுகை நடைமுறைகளுக்கு உரிய தெரிவினை தெரிவு செய்தல்.
- உற்பத்தி செயற்பாடுகளுக்கு உரிய தரக்கட்டுப்பாடு மற்றும் நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றதா என ஆய்வு செய்தல்.
- திரிபோஷா குறித்துரைத்த நபர்களுக்கு, தேவையான நேரத்திற்கு, தேவையான இடங்களுக்கு கிடைக்கப் பெறல் தெரிவின் மூலம் பரீட்சித்தல்.

## 2.9 கணக்காய்வு நோக்கங்கள்

கணக்காய்வின் பிரதான நோக்கமான சிறுவர்களுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் திரிபோஷா வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றலை மதிப்பிடுவதாகும்.

**உப நோக்கங்கள் மற்றும் நியதிகள்**

| | உப நோக்கங்கள் | | மூல அடிப்படை |
|---|---|---|---|
| அ. | உற்பத்திக்காக தேவையான ஆரம்ப திட்டத்தை தயாரித்தல். | I. | நிறுவனத்தின் பாதீடு |
| | | II. | நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் |
| | | III. | நிறுவனத்தின் கூட்டிணைந்த திட்டம் |
| | | IV. | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2003 யூன் 23 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான நல்லாலுகை தொடர்பான வழிகாட்டி கைநூல் (ீனுனு 12) |
| ஆ. | மூலப் பொருட்களை பெற்றுக்கொள்ளல் | I. | கம்பனியின் ஒட்டுமொத்த நியதிகள் |
| | | II. | நிறுவனத்தின் கட்டமைப்பு செயற்பாடுகளின் நடைமுறைகள் |
| | | III. | பெறுகை வழிகாட்டிக் கோவை |
| | | IV. | அரச கொள்கைகள் |
| | | V. | நிறுவனத்தின் பாதீடு |
| | | VI. | நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் |
| | | VII. | சர்வதேச நியமங்கள் |
| | | VIII. | வழங்குனர்களுக்கு மூலப் பொருட்களுக்காக வழங்கப்படுகின்ற தரச் சான்றிதழின் மாதிரி |
| | | IX. | மூலப் பொருட்களின் தரத்திற்குரிய நியம தரம். |
| இ. | திரிபோஷா உற்பத்தி | I. | நிறுவனத்தின் தரப்பரிசோதனை நியமம் |

| | | | |
|---|---|---|---|
| | | II. | நிறுவனத்தின் முன்னுரிமை செயலாற்றல் குறிகாட்டி |
| | | III. | நிறுவனத்தின் நியமமிடப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள் |
| | | IV. | இலங்கை நியமங்கள் நிறுவனம் |
| | | V. | உலக சுகாதார அமைப்பு (றுர்ழு).∴ உலக உணவு அமைப்பு (றுகுழு) நியமங்கள் |
| | | VI. | ஐளுழு நியமம் |
| | | VII. | போஷாக்கு மூலக்கூறுகள் |
| | | VIII. | களஞ்சியத்தில் காணப்பட வேண்டிய அதிகூடிய வெப்ப நிலை. |
| ஈ. | திரிபோஷா பகிர்ந்தளித்தல் | I. | நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் |
| | | II. | நிறுவனத்தின் நியமமிடப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் |
| | | III. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் |
| | | IV. | மாகாண சுகாதார நிலையங்களின் திட்டம். |
| உ. | தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை பின்பற்றுதல் | I. | உணவு மூலக்கூறுகளின் உள்ளடக்கம். |
| | | II. | றுர்ழு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாட்டு நியமங்கள் |

## 3. விரிவான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஆரம்ப திட்டமிடல்

#### 3.1.1 மூலப் பொருட்களுக்கான களஞ்சிய வசதிகளை திட்டமிடல்.

கம்பனியின் உற்பத்திக்காக தேவையான பிரதான மூலப் பொருளான சோளம் மற்றும் சோயா அவரை அத்தியவசியமாக இருந்ததுடன், அந்த மூலப் பொருட்கள் பற்றாக்குறையின்றி வழங்குதல் அத்தியவசியமானதாகும். தற்போது நிறுவனத்திற்கு சொந்தமான சைலோக்களின் இயலளவு 300 மெற்றிக் தொன் ஆக இருந்ததுடன், இது 03 தினங்கள் மாத்திரம் உற்பத்திக்கு நிறுவனத்திற்கு வழங்கக் கூடிய அளவாக இருந்ததுடன், நிறுவனத்தின் உற்பத்தி நடைமுறைகளின் பிரகாரம் ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு தேவையான சோயா அவரை மற்றும் சோளம் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். இதற்காக 4000 மெற்றிக் தொன் வீதம் இயலளவுடைய இரண்டு சைலோக்களை நிர்மாணிப்பதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூபா 450 மில்லியன் ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் போது தேவையான நிதியம் நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்ற போதும், அந்த சந்தர்ப்பத்தின் போது வழங்குனர் ஒருவரை கண்டுபிடிப்பதில் வசதியீனமாக இருந்தமையால் அந்த பணிகளை அவ்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு நிறுவனம் தவறியிருந்தது. மேலும் 2018 ஆம் ஆண்டின் பாதீட்டில் நிதி ஏற்பாடு கோரப்பட்ட போதிலும், இது வரையிலும் அதற்குத் தேவையான நிதி கிடைக்கப் பெறவில்லை.

தற்போது சோளம் மற்றும் சோயா அவரை சிறிய அளவிலான இரண்டு சைலோக்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், சிறிய இட வசதி அளவினை உடைய களஞ்சியத்தில் ஆகும். உரிய மதிப்பீடு செய்யப்பட்ட இரண்டு சைலோக்களுக்காக தேவையான நிதி கிடைத்ததும் இந்த திட்டமிடப்பட்ட இரண்டு சைலோக்களும் நிறுவனத்திற்கு பெறக் கூடியதாக இருப்பதுடன், தற்போது சோயா அவரை மற்றும் சோளம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இட அளவு திரிபோஷா களஞ்சியப்படுத்துவதற்கு ஈடுபடுத்த முடியுமாக இருந்தமையினால் நிறுவனத்தில் காணப்படுகின்ற களஞ்சிய வசதிகள் போதியளவில் இல்லாதிருந்த பிரச்சினைகளையும் மாற்றியமைப்பதற்கு முடியுமாக உள்ளது.

### 3.2 திரிபோஷா உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக்கொள்ளல்

திரிபோஷா உற்பத்திக்கு தேவையான அடிப்படை மூலப் பொருளான சோளம் மற்றும் சோயா அவரை என்பவற்றில் வருடாந்தம் அத்தியவசியமான 6000 மெற்றிக் தொன் சோயா மற்றும் 12000 மெற்றிக் தொன் சோளம் ஆகும். இந்த தேவையுடன் பால்மா தேவையும் அமைச்சின் பெறுகைக் குழுவின் மூலம் பெறுகை செய்யப்பட்டு, நிறுவனத்திற்கு உரிய வழங்குனர் மற்றும் உரிய கூறுவிலைகள் வழங்கப்படுகின்றது. ஏனைய மூலப் பொருட்களான விற்றமின் கனியுப்புக்கள் மற்றும் பொதியிடல் மூலப் பொருட்கள் நிறுவனத்தின் பிரதான பெறுகைக் குழுவின் மூலம் போட்டி கேள்வி முறைமையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டு மூலப் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

செயலாற்றல் கணக்காய்வின் விடயப்பரப்பின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 யூன் 30 வரை இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட உரிய பெறுகைகள் தொடர்பான அவதானிப்புக்கள் இந்த தலைப்பின் கீழ் காண்பிக்கப்படுகின்றது.

### 3.2.1 பெறுகைத் திட்டம்

தேசிய பெறுகைகள் முகவராண்மை வழிகாட்டிக் கோவை 4.2.1 இன் (இ) பிரிவின் பிரகாரம் அடுத்துவரும் வருடத்திற்கான பெறுகை நடவடிக்கைகள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டும். எனினும், நிறுவனம் இந்த தேவையின் பிரகாரம் விரிவான பெறுகைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. அதன் காரணமாக குறித்த காலப் பகுதியில் மூலப் பொருட்களை கட்டளையிடல் மற்றும் அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. அது தொடர்பான விபரங்கள் எதிர்வரும் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### 3.2.2 வழங்குனர் பதிவினை உடன்படிக்கைசெய்தல் மற்றும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்

இலங்கை திரிபோஷா நிறுவனத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக உரிய பெறுகைகள் மேற்கொள்ளும் போ்து அமைச்சு பெறுகைக் குழுவின் மூலம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டு உரிய தீர்மானம் இலங்கை திரிபோஷா நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்றது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களுடன் முழுமையான பெறுகைகளுக்குரிய உடன்படிக்கை செய்யப்படாமல், அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு கட்டளைகளுக்கும் உரியதாக மாத்திரம் உடன்படிக்கை செய்யப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ்வாறான உடன்படிக்கை செய்யப்படாமையின் காரணமாக 15,000 மெற்றிக் தொன் சோள அளவிற்காக ரூபா 734,250,000 பெறுமதியான வழங்கலின் போது உரிய வழங்குனர்களினால் அவ்வப் போது மூலப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், வழங்குனர் கால அட்டவனை (னுநடளைநசல ளுஉாநனரடந ) இன் பிரகாரம் தேவையான மூலப் பொருட்கள் வழங்கப்படாமையால் உற்பத்தியினை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறான உற்பத்தி தடைப்படல் தொடர்பான விபரங்கள் எதிர்வரும் பந்திகளில் விளக்கப்பட்டுள்ளது.

### 3.2.3 உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்பட்ட மூலப் பொருட்களை வழங்குதல்

நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளின் பிரகாரம் உள்நாட்டு விவசாயிகளை வலுப்படுத்துவதற்காக திரிபோஷா உற்பத்திற்கு தேவையான பிரதான இரண்டு மூலப் பொருட்களான சோயா அவரை மற்றும் சோளம் என்பன உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட சோயா அவரை மற்றும் சோளமாக இருகக் வேண்டும். ஏதாவது ஒரு வழங்குனரினால் இறக்குமதி செய்யப்பட்ட சோயா அவரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவை இறக்குமதி செய்யப்பட்ட இருப்புக்களாக

இருந்தமை பின்னர் உறுதிப்படுத்தப்படுமாயின் வழங்கப்பட்ட கேள்வி செயற்பாடற்றதாக இரத்துச் செய்யப்படுவதுடன், எதிர்வரும் கேள்விகளுக்காகவும் அவருக்கு முன்வர முடியாதிருந்தது. எனினும், 2004 திசெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டு உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தால் மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். எவ்வாறாயினும் நிறுவனத்தினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் களஞ்சியத்திற்கு கிடைக்கின்ற இருப்புக்கள் உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டதா என நிறுவனத்தால் அவற்றை சரியாக உறுதிப்படுத்துவதற்கான திட்ட முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் ஒட்டுமொத்த செயற்பாடுகளில் உள்நாட்டு விவசாயிகளை வலுப்படுத்தும் நோக்கம் உண்மையாகவே நிறைவேற்றப்பட்டிருந்ததா என நிறுவனத்தில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்துடன், அதனை கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பமும் காணப்படவில்லை.

### 3.2.4 வழங்குனர்களைத் தெரிவு செய்தல்

திரிபோஷா உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை வழங்குவதற்காக 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்காக 2019 யூன் வரையான காலத்திற்குரிய எதிர்காலத்தில் உள்ள விலைகளை கவனத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் தொடர்பாக கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

அ. 2016 – 2017 ஆம் ஆண்டுகளுக்காக 15000 மெற்றிக் தொன் சோளம் கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

ஐ. 2016 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரை தேவையான 15000 மெற்றிக் தொன் சோளத்தை கொள்வனவு செய்வதற்காக 2016.11.10 ஆம் திகதி செய்திப் பத்திரிகை அறிவித்தலின் மூலம் கேள்வி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கேள்விதாரர்கள் பதினொரு (11) பேரினால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கேள்வி திறத்தல் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 08 கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஐஐ. இதன் போது 2016 திசெம்பர் 01 முதல் 2017 நவம்பர் 30 வரையான வருட காலப்பகுதிக்காகவே கேள்வி கோரப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது 2017 மார்ச் மாதம் முதல் 09 மாத அளவான குறைந்த கால அளவிற்காகவே ஒரு கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செய்தல் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் இலக்கம் 7.8.4 (இ) இன் பிரகாரம் கேள்வி, போதியளவான செல்லுபடிக் காலப்பகுதியில் வழங்குவதற்கு தவறியமை என்ற பிரிவின் கீழ் பாரியளவிலான புறக்கணித்தலொன்றாக கருதப்படுகின்றது.

ஐஐஐ. உரிய கேள்வி மூலம் வருடம் முழுவதற்குமான காலங்களுக்காக கேள்வி ஆவணங்களின் மூலம் ஒரு கூறுவிலை மாத்திரம் கோரப்பட்டிருந்த போதும் இதன் போது ஒரு கேள்விதாரரினால் அதன் கால எல்லை தமது விருப்பத்தின் பிரகாரம் இரண்டு காலங்களுக்கு பிரிக்கப்பட்டு அந்தந்த காலங்களுக்கு மாத்திரம் உரியதான வகையில் வெவ்வோறாக ஒன்றுக்கு ஒன்று வெவ்வோறான கூறுவிலைகள் இரண்டின்

மூலம் அந்த முழுமையான கேள்வி காலத்தை மேவுகை செய்வதற்காக இரண்டு கூறு விலைகள் சமர்ப்பிக்கப்பட்டு முறையற்ற செயற்பாடொன்று பின்பற்றப்பட்டிருந்தது. இதனை ஏற்றுக் கொள்ளல் ஏனைய கேள்விதாரருக்கு நியாயமற்றதாக இருந்ததன் அடிப்படையில் விவாதத்திற்கு உடபடுகின்றமையை தவிர்க்க முடியாதிருந்தது.

மேலே கூறப்பட்ட முறையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி, நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், நிலைமை அவ்வாறு இருக்கும் போது இந்த பெறுகை கூறுவிலைகள் இரண்டின் கீழ் கேள்வி சமர்ப்பித்த எஸ் டீ கே யுனைடட் எக்ரிவென்சர்ஸ் (தனியார்) கம்பனிக்கு 4000 மெற்றிக் தொன் ரூபா 54.68 இற்கும், மிகுதி மெற்றிக் தொன் 11000 இற்கு ரூபா 48.95 விலையிலும் வழங்கும் அடிப்படையின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது.

மே மாத இறுதி வரையிலும் இரண்டாவது மெற்றிக் தொன் 11000 இல் மெற்றிக் தொன் 2000 அளவில் குறித்த பிரகாரம் சோளம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் அந்த விலையில் வழங்குவதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2017.06.27 அன்று கேள்விச் சபை தீர்மானத்தின் பிரகாரம் அவசர மற்றும் விரைவான தேவையினை கருதி 1முப இற்கு ரூபா 52.50 (வரியின்றி) விலையில் 1000 மெற்றிக் தொன் அளவில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் சோளம் 1முப இற்கு ரூபா 54.68 தொகை அவர்களினால் கோரப்பட்டிருந்தது. 2017 யூலை மாதம் முதல் இந்த கேள்வி இரத்துச் செய்யப்பட்டு புதிய கேள்வி ஒன்றுக்காக நிறுவனத்திற்கு செல்லவேண்டி ஏற்பட்டதுடன், அதன் போது ரூபா 59.50 விலையில் சோளத்தை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பட்டிருந்தது. இவ்வாறு அவ்வப்போது கூறு விலைகள் மாற்றமடைவதற்கு 2016.்.2017 ஆண்டுகளுக்கு தேவையான 15000 மெற்றிக் தொன் சோளத்தினை வழங்குதல் தொடர்பான பெறுகைகளுக்காக வழங்குனருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை காரணமாக இருந்ததுடன் உரிய வழங்குனரினால் அவ்வப்போது விலைகள் மாற்றப்பட்டமையினாலும் மற்றும் தொடர்ச்சியாக வழங்காமையினாலும் இலங்கை திரிபோஷா நிறுவனத்திற்கு 1முப சோளத்திற்காக ரூபா 10.55 தொகையொன்று மேலதிகமாக செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்ததுடன், இழக்கப்பட்ட உற்பத்தி 261,225 மெற்றிக் தொன் ஆகும்.

ஆ. திரிபோஷா உற்பத்திக்கு 2017 ஆம் ஆண்டின் 03 மாதங்களுக்காக 5000 மெற்றிக் தொன் சோளம் வழங்குவதற்காக வழங்குனரை தெரிவு செய்தல்

2017 ஆம் ஆண்டிற்கு தேவையான சோள அளவு 15000 மெற்றிக் தொன் இற்காக கேள்வி கோரப்பட்டு வழங்குனர் தெரிவு செய்யப்பட்ட போதிலும், அந்த கம்பனிக்கு ஆண்டின் இறுதி வரையில் உள்நாட்டு சோளங்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக தொடர்ச்சியாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் 5000 மெற்றிக் தொன் சோளத்தை உள்நாட்டில் இருந்தோ அல்லது இறக்குமதி மூலமோ பெற்றுக்கொள்வதற்கு 2017 ஒக்தோபர் மாதம் 16 ஆம் திகதி தேசிய போட்டி முறைமையின் கீழ் கேள்விற்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்காக இரண்டு நிறுவனங்களில் இருந்து மாத்திரம் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவர்களின் கேள்விகளில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகள் முறையே ரூபா 59.50 மற்றும் 56.50 ஆகும். அதனால் இதில் ஆக குறைந்த கேள்வி சமர்பித்துள்ள கம்பனி வழங்குனராக தெரிவு செய்யப்பட்ட போதிலும், அவருக்கு அந்த இருப்பினை வழங்குவதற்கு 35 நாட்கள் தேவையானதாக இருந்தமை குறிப்பிடப்பட்டமையினால் அது வரையிலும் உற்பத்திற்கு தேவையான சோள அளவான 1000 மெற்றிக் தொன் முன்னர் கேள்வி கையளிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்க அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

முதலாவது பெறப்பட்ட இந்த 1000 மெற்றிக் தொன் சோளம் முடியவடைந்ததும், கேள்வி கையளிக்கப்பட்ட நிறுவனத்திற்கு சோளத்தினை வழங்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், அதன் போது அவர் உரிய தினத்தில் சோளத்தினை வழங்க முடியாதிருந்ததாக அறிவித்தமையினால் மீண்டும் முன்னர் கேள்வி கையளிக்கப்பட்ட நிறுவனத்திலேயே 750 மெற்றிக் தொன் சோளத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

பின்னர் இந்த கேள்வி கையளிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 1000 மெற்றிக் தொன் அளவு நியமத்திற்கு புறம்பாக இருந்தமையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு தொடர்ச்சியாக இந்த கேள்வி கையளிக்கப்பட்ட நிறுவனங்களினால் உரிய வழங்கல் மேற்கொள்ளப்படாமையினால் மற்றும் நியமங்களுக்கு புறம்பான சோளங்கள் வழங்கப்பட்டமையினால் இந்த பெறுகைகளுக்குரிய 5000 மெற்றிக் தொன் சோளம் முன்னருள்ள வழங்குனரால் ரூபா 59.50 அதாவது 1முப இற்கு ரூபா 3 வீதம் அதிகரித்த விலையொன்றை செலுத்துவதற்கு நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

இ. உற்பத்திற்காக பால்மாவை கொள்வனவு செய்வதற்காக வழங்குனரை தெரிவு செய்தல்

திரிபோஷா உற்பத்திக்காக பால்மா கொள்வனவு செய்யும் போது கேள்வி கோராமல் உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் உள்நாட்டு பாற் பண்ணையாளர்களை நாட்டின் பொருளாத அபிவிருத்தியில் உயர்ந்த பங்களிப்பை வழங்கும் நோக்காகக் கொண்டு அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் மில்கோ தனியார் கம்பனியில் இருந்து மாத்திரம் பால்மா கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு தேவையான ஹைலன்ட் பால்மா பெற்றுக் கொள்ளும் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது மில்கோ தனியார் கம்பனி மூலம் திரிபோஷா உற்பத்திக்கு தேவையான பால்மா அதன் சில்லறை விலையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்காக ஹைலன்ட் பால்மா 1முப இற்கு ரூபா 810 விலையிலும், 2018 ஆம் ஆண்டிற்காக 1முப ஹைலன்ட் பால் மா ரூபா 798 விலையிலும், 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 800 விலையிலும், வழங்குவதற்காக உடன்பட்டிருந்தனர். இது தொடர்பாக மேலும், மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் நிறுவனத்தினால் திரிபோஷா கம்பனியின் சுற்றாடலுக்கு முன்னால் நடாத்திச் செல்லப்படுகின்ற ஹைலன்ட் விற்பனை நிலையத்தில் மில்கோ கம்பனியின் முகவரினால் ஹைலன்ட் பால் மா 1முப பக்கட் ஒன்று ரூபா 690 விலையில் வழங்கப்பட்டிருந்தமை 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் கொடுப்பனவு

உறுதிச்சீட்டுக்களின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்காக முறையே 1முப இற்காக ரூபா 120, ரூபா 108, ரூபா 110 ஆக அதிகரித்த விலையினை செலுத்துவதற்கு திரிபோஷா நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அதன் மூலம் திரிபோசஷா கம்பனிக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த நட்டம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 77,760,000 ஆகவும், 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 64,800,000 ஆகவும், 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 66,000,000 ஆகவும் இருந்தன. மேலும், இலங்கை திரிபோசஷா நிறுவனம் ஹைலன்ட் பால்மா கொள்வனவு 25முப மாஸ்டர் பேக் அளவிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றது. அதனால் 1முப பக்கட்டினை பெற்றுக் கொள்வதனை விட பொதியிடல் கிரயமும் குறைவடைய வேண்டும். அதன் பிரகாரம் பார்க்கின்ற போது இலங்கை திரிபோஷா நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்ற 1முப அலகுக்காக வழங்கப்படுகின்ற விலை முகவர்களுக்கு வழங்கப்படுகின்ற விலையை விட மேலும் குறைவாக இருக்க வேண்டும்.

### 3.2.5 வழங்கல்களில் தாமதம்

திரிபோஷா உற்பத்திக்கு தேவையான அடிப்படை மூலப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது இருப்பு கட்டுப்பாட்டில் பின்பற்றப்படுகின்ற கால நிர்ணயங்களை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மதிப்பீடு (மீள் கட்டளையிடல், இருப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக எடுக்கின்ற காலம்) மேற்கொள்ளப்படாமையினால் திட்டமிடப்பட்ட பிரகாரம் உற்பத்தியினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தேவையான மூலப் பொருட்கள் கால நேரத்தில் வழங்கப்படாமை உற்பத்தியின் வினைத்திறனுக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. அது தொடர்பான உதாரணங்கள் பின்வருமாறு

அ. 2018 ஆம் ஆண்டிற்காக 6000 மெற்றிக் தொன் சோயா அவரை கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2018 பெப்ரவரி மாதம் பெறப்பட்டு 2018 ஏப்ரல் 24 ஆம் திகதி செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஒன்றின் மூலம் கேள்வி கோரப்பட்ட போதும், 2019 யூலை 26 ஆம் திகதி வரை கேள்வி கையளித்தல் தாமதிக்கப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் பெறுகை நடைமுறைகளுக்காக காலம் எடுக்கின்றமையினால் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நிறைவேற்றிச் செல்வதற்கு போட்டியாளர் கேள்வியின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், உற்பத்தி தடைப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் உரிய மூலப் பொருட்கள் பற்றாக்குறையினால் உற்பத்தி கைவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு,

| மாதம் | உற்பத்தி கைவிடப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | உற்பத்தி இயந்திரம் ஐ | உற்பத்தி இயந்திரம் ஐஐ |
| பெப்ரவரி | 7 | 7 |
| திசெம்பர் | 165 | - |

ஆ. 2018 ஆம் ஆண்டிற்கு தேவையான சோளம் 12000 மெற்றிக் தொன் வழங்குவதற்காக 2018.02.08 ஆம் திகதிய பெறுகைக் குழு ஆரம்பித்த மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்குரிய கேள்விகள் 2019.02.27 ஆம் திகதியே கையளிக்கப்பட்டிருந்ததுடன், இந்த கேள்விக்குரிய நடைமுறைகளுக்காக 13 மாத காலம் எடுத்திருந்தது. இந்த கேள்வி 12000 மெற்றிக் தொன் சோளம் அளவொன்றை 1முப ரூபா 55.90 இற்கு வழங்குவதன் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் இந்த தாமதத்தினால் போட்டியாளர் கேள்வி கோருவதன் அடிப்படையில் நிறுவனத்தின் பெறுகை குழு தீர்மானத்தின் பிரகாரம் 1முப இற்காக 59.50 மற்றும் ரூபா 58.50 என்ற அதிகரித்த கூறுவிலையின் கீழ் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.3 திரிபோஷா உற்பத்தி


### 3.3.1 திரிபோஷா சுற்றாடலை திட்டமிடல் மற்றும் முறையாக நடாத்திச் செல்லல்.

ளுடுளு 143:1999 நியமத்தின் 5.2.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் உணவு உற்பத்தி நிறுவனமொன்று வடிவமைத்தல் மற்றும் வெளியிடல் (னுநளபைெ ரூ டுயலழரவ) உற்பத்தியின் தரத்தினை பாதுகாக்கும் வகையில் திட்டமிடல் செய்யப்பட வேண்டும்.

#### 3.3.1.1 உற்பத்தி சூழலில் உயிரினங்களால் ஏற்படுகின்ற தாக்கங்கள்

உற்பத்தி பிரிவில் என்டர்சன் இயந்திரம் 1, 2 மற்றும் உலர்த்தும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள பிரதேசத்தில் புறாக்களின் கணிசமான அளவில் வசித்து வருகின்றமை (நிழற்பட இலக்கம் 01) மற்றும் அவைகளின் எச்சங்கள் இந்த பிரிவில் பல்வேறு இடங்களில் பரந்து காணப்படுகின்றமை (நிழற்பட இலக்கம் 02) 2019 செப்தெம்பர் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. 2020 யூன் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட் களப் பரிசோதனையின் பிரகாரமும் உரிய பிரதேசத்தில் தொடர்ந்தும் புறாக்களின் கழிவுகள் (சிறகுகள்) பரந்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

உற்பத்தி நடைமுறைகளின் போது உலர வைத்தல் இயந்திரங்களின் பின்னர் மூடப்படாதிருந்த பட்டைவார் (ஊழளெநலநச) மூலம் திரிபோஷா கொண்டுசெல்லப்படுவதுடன், இதன் போது அந்த உயிரினங்களின் கழிவுகள் உற்பத்தியுடன் கலக்கின்றமை தவிர்க்க முடியாத நிலைமையொன்றாக இருந்தது. மேலும் இந்த சந்தர்ப்பத்தின் பின்னர் உற்பத்தி சிறிய பகுதிகளாக பிரிக்கப்பட்டு விற்றமின் மற்றும் ஏனையவைகளும் கலக்கப்பட்டு பொதியிடப்பட்டதுடன், அதனால் ஏதாவது கழிவுகளும் கலக்கப்பட்டிருக்குமாயின் அது இறுதி உற்பத்தியில் உள்ளடங்குதல் ஆபத்தாக காணப்பட்டமையினால் உற்பத்தி பணிகளுக்குரிய பின்புலம் சுகாதார பாதுகாப்புத் திட்டமுறைமை பின்பற்றப்படாமல் நடாத்திச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.



நிழற்படம் இலக்கம் 01 - உற்பத்தி பிரிவின் கட்டிடத்தில் உள்ளே புறாக்கள் நடமாடல்



நிழற்படம் 02 - உற்பத்தி சுற்றாடலில் புறாக்களின் கழிவுப் பொருட்கள் காணப்படல்

### 3.3.1.2 உற்பத்தி நடைமுறைகளில் உருவாகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவம்

நிறுவனத்தில் என்டர்சன் இயந்திரிம், உலரவைத்தல் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள பிரிவு மற்றும் சோயா அவரை தோல் அகற்றும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள பிரிவு என்பவற்றை பிரிப்பதற்காக திரையொன்று ஈடுபடுத்தப்பட்டிருந்தது. சோயா அவரை தோல் அகற்றும் செயன்முறைகளின் போது அதிலிருந்து அகற்றப்படுகின்ற தோற்களின் பகுதி என்டர்சன் இயந்திரம் மற்றும் உலரவைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள பிரதேசம் முழுவதும் பரவி காணப்பட்டது. (நிழற்பட இலக்கம் 3,4) 2020 யூன் 25 ஆம் திகதி வரையிலும் இந்த நிலைமை அவ்வாறே காணப்படுகின்றமை அன்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.



நிழற்பட இலக்கம் - 03 சோயா அவரை தோல் அகற்றும் பிரிவிலிருந்து அகற்றப்படுகின்ற பகுதிகள் உற்பத்தி பிரிவில் குவிந்து காணப்படுகின்ற விதம்.



நிழற்பட இலக்கம் - 04 சோயா அவரை தோல் அகற்றும் பிரிவிலிருந்து அகற்றப்படுகின்ற பகுதிகள் உற்பத்தி பிரிவில் குவிந்து காணப்படுகின்ற விதம்.

### 3.3.2 ஊழியர்களின் சகாதார பாதுகாப்பு மற்றும் உற்பத்தியின் பாதுகாப்பு தன்மை.

நிறுவனத்தில் உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்கள் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட ளுடுளு 143:1999 இன் 8.3 பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் பொருத்தமான தலைக்கவசம், பாதணிகள் போன்றவை அணிய வேண்டிய இருந்த போதிலும், அவ்வாறு அணியாதிருந்தமை 2019 செப்தெம்பர் மாதம் 17 ஆம் திகதி மற்றும் 2020 யூன் 25 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. (நிழற்பட இலக்கம் 05) இதன் மூலம் உற்பத்தியின் பாதுகாப்பு தன்மைக்கும் ஊழியர்களின் சுகாதார பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.



நிழற்பட இலக்கம் 05 – பொருத்தமான தலைக்கவசம் மற்றும் பாதணிகள் அணியாதிருந்த உற்பத்தி பிரிவின் ஊழியர்.

### 3.3.3 பார்வையாளர்கள் உற்பத்தி பிரிவில் நுழைதல்

ளுடுளு 143:1999 நியமத்தின் 8.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் உணவு உற்பத்தி, தயாரித்தல் வலையத்தில் உள்நுழைகின்ற போது அதற்கு ஈடுகொடுக்கின்ற பாதுகாப்பு உடைகள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமை சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த தேவை நிறுவனத்தின் உற்பத்தி பிரிவில் நுழைகின்ற பார்வையாளர்கள் தொடர்பாக அமுல்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டதுடன், அந்த நிலைமை 2020 யூன் 25 ஆம் திகதி வரையிலும் அவ்வாறே காணப்படுகின்றமை களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.3.4 உற்பத்தி செயற்பாடற்று காணப்பட்டமை

2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் தரவுகளை பரிசோதனை செய்த போது அந்த காலத்தில் என்டர்சன் இயந்திரம் (யு1) மற்றும் என்டர்சன் இயந்தரம் (யு2) இயந்திரங்கள் முறையே 6912 மணித்தியாலம் மற்றும் 2809 மணித்தியாலமும், 7047 மணித்தியாலம் மற்றும் 889 மணித்தியாலமும், 3371 மணித்தியாலமும் 1334 மணித்தியாலமும் ஆக உற்பத்தி கைவிடப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. இதற்காக திரிபோஷா களஞ்சிய தாங்கி நிறைந்து காணப்பட்டமை, இயந்திரங்கள் கீழ் விழுந்திருந்தமை ஊழியர்கள் போதியளவாக காணப்படாமை, மின்சாரம் தடைப்பட்டமை, பொதியிடல் பொருட்களின் பற்றாக்குறை மூலப் பொருள் பற்றாக்குறை (சோளம், சோயா மற்றும் கனியுப்புக்கள்) போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்ததுடன், அதன் போது பதவியணியினர் பற்றாக்குறையின் அடிப்படையில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை ஒட்டுமொத்த உற்பத்தியும் வீழ்ச்சியடைதல் 77 சதவீதமாக இருந்தது. இதனை தவிர்க்கும் போது திரிபோஷா களஞ்சிய தாங்கி நிறைந்திருந்தமை, இயந்திர கோளாறுகள், மூலப் பொருள் வழங்குதலில் உள்ள தாமதம் எனபவற்றினால் இந்த உற்பத்தி கைவிடப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

திரிபோஷா மற்றும் சூபோஷா உற்பத்திற்காக நிறுவனத்திற்கு என்டர்சன் ஐ மற்றும் என்டர்சன் ஐஐ இற்காக அரைத்தல் இயந்திரங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டதுடன் அவற்றிலிருந்து முறையே மணித்தியாலம் ஒன்றுக்கு 1800 கி. கிராம் மற்றும் மணித்தியாலத்திற்கு 2700 கி. கிராம் இயலளவை உடையதாக இருந்தது. எவ்வாறாயினும் போதியளவான ஊழியர் தரப்பினர் இருக்காமையின் காரணமாக ஒரு வருடத்திற்கு இந்த இயந்திரங்கள் இரண்டிலும் ஒரு இயந்திரம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

யு-1: என்டர்சன் இயந்திரம் ஐஇ யு-2: என்டர்சன் இயந்திரம் ஐஐ

| காரணம் | 2017(மணி.) | | 2018(மணி.) | | 2019 (ஆகஸ்ட் வரை)(மணி.) | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | யு-1 | யு-2 | யு-1 | யு-2 | யு-1 | யு-2 | |
| திரிபோஷா களஞ்சிய தாங்கி நிறைந்து காணப்பட்டமை | - | 950.5 | 9.25 | 506.15 | - | 251.5 | |
| இயந்திரம் கீழே விழுந்திருந்தமை | - | 426.45 | 8 | 264.25 | - | 346.55 | |
| ஊழியர்கள் போதியளவாக இருக்காமை | 6912 | 632.5 | 6506 | 42 | 3246 | - | 17,338.5 |
| மின்சாரம் தடைப்பட்டிருந்தமை | - | 27 | - | 2.75 | - | 5.5 | |
| பொதியிடல் பொருட்கள் பற்றாக்குறை | - | 103 | - | 66.75 | - | 222 | |
| மூலப் பொருட்களின் பற்றாக்குறை (சோளம்) | - | 581.25 | 292 | - | - | 358 | |
| மூலப் பொருட்களின் பற்றாக்குறை (சோயா அவரை) | - | 80.5 | 172 | 7 | - | | |
| மூலப் பொருட்களின் பற்றாக்குறை (கனியுப்புக்கள்) | - | 7.5 | - | - | - | - | |
| மூலப் பொருட்களின் பற்றாக்குறை (விற்றமின்) | - | - | 60 | - | - | - | |
| உற்பத்தி களஞ்சியத்தில் இட வசதி காணப்படாமை. | - | - | - | - | - | 10.5 | |
| ஏனைய காரணங்கள் | - | - | - | - | 125 | 139.5 | |
| | 6,912 | 2,808.7 | 7,047.25 | 888.9 | 3,371 | 1,333.55 | 22,361.4 |

அட்டவணை இலக்கம் 04 - உற்பத்தி செயற்பாடற்றுக் காணப்பட்ட காலப்பகுதி மற்றும் அதற்கு தாக்கமளித்த காரணங்கள்.

### 3.3.6 உற்பத்தி இலக்கை அடைதல்


2017, 2018, 2019 (ஆகஸ்ட் மாதம் வரை) ஆம் ஆண்டுகளுக்குரிய தரவுகளை பரிசீலிக்கும் போது நிறுவனத்தால் அவர்களின் உற்பத்தி இலக்கு அடையப்படாதிருந்ததுடன், அதற்காக மூலப் பொருள் பற்றாக்குறை, ஊழியர் பற்றாக்குறை போன்றவை தாக்கமளித்திருந்ததாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. (இணைப்பு 01) அதன் பிரகாரம் உரிய ஆண்டுகளில் (மாதாந்த உற்பத்தி முரண்கள்) முறையே 510,740 முப முதல் 1,310,078 முப வரையும், 132,110 முப முதல் 697,176 முப வரையும், 941,144 முப முதல் 1,527,108 முப வரையும் காணப்பட்டன. அதன் பிரகாரம் உரிய முரண்களை குறைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் உற்பத்தி செயற்திறனாக உற்பத்தி செயற்திறன் வீழ்ச்சியடைவதற்கு தாக்கமளித்திருந்தது.

### 3.3.7 உற்பத்திக் கிரயம்

நிறுவனத்தால் முறையாக கிரயத்தை கணிப்பிடுதலோ அல்லது பகுப்பாய்வு செய்தலோ மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயம் (ளுவயனெயசன ஊழளவபைெ) என்ற திட்டமொன்று பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி கிரயத்தின் நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு முரண்களை குறைத்து முறையான கிரய கட்டுப்பாடு ஒன்று செய்ய முடியுமாக இருந்த போதிலும், நிறுவனத்தினால் அவ்வாறான முறையான திட்டமுறைமையொன்று பின்பற்றப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே முறையான பிரகாரம் பொது மேந்தலை விடயங்களை இனங்கண்டு அவற்றை உற்பத்திக்காக உள்ளீர்ப்பதன் மூலம் உற்பத்தியின் உள்ளபடியான கிரயத்தை தீர்மானிப்பதன் மூலம் கிரய கட்டுப்பாட்டிற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

### 3.3.8 திரிபோஷா உற்பத்தி செயன்முறைகளில் தொகுதி முறைமை (டீயவஉா ˚சழஉநளள ளுலளவநஅ) அமுல்படுத்தப்படாமை

உற்பத்தி செயன்முறைகளில் தொகுதி முறைமை **(டீயவஉா ˚சழஉநளள ளுலளவநஅ)** அமுல்படுத்தப்படாமையினால் எந்தவொரு திரிபோஷா பக்கட்டுக்களிலும், பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது அந்த உற்பத்தி தொகுதியில் உற்பத்தி செய்யப்படதா என இனங்காணும் இயலுமை காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே திரிபோஷா பக்கட் இல் அச்சிடப்பட்டுள்ள உற்பத்தி மற்றும் காலாவதியாகும் திகதிகளை தவிர உற்பத்தியை (நிழற்படம் 06) இனங்காணுதல் தொடர்பாக ஏனைய தகவல்கள் அவதானிக்கப்படவில்லை.




நிழற்பட இலக்கம் 06 – திரிபோஷா உறையில் உற்பத்தித் திகதி மற்றம் காலாவதியாகும் திகதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தமை.

### 3.4 திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தின் தரக் கட்டுப்பாடு

நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செய்வதற்காக தரக் கட்டுப்பாட்டு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், அந்த பிரிவில் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பேணிச் செல்வதன் மூலம் உற்பத்திகளின் தரத்தை உயர் மட்டத்தில் பேணிச் செல்லும் இயலுமை காணப்பட்டது. கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அதற்குரிய அவதானிப்புக்கள் கீழே உள்ள உப பிரிவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

#### 3.4.1 திரிபோஷா மற்றும் சூபோஷா உற்பத்திக்குரிய வழங்குனர்கள் தொடர்பாக தரச் சான்றுதழ் விநியோகித்தல்

விபரம் பின்வருமாறு

அ. மூலப் பொருட்கள் வழங்குனர் புதிய வழங்குனராக இருக்கும் போது அந்த வழங்குனரின் செயற்பாட்டு சூழல் திரிபோஷா கம்பனியின் தரச் சான்றிதழ் பிரிவினால் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்தமை கம்பனியின் பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பிரதான வழங்குனரான பின்னவரும் நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- எஸ் டீ கே யுனைடட் எக்ரீவென்சர்ஸ் தனியார் கம்பனி (ளுனுமு ருவைநன யுபசை ஏநவெரசநள (ீஎவ) டுவன.)
- கோல்டன் புட்ஸ் எக்ரோ தனியார் கம்பனி (புழடனநெ குழழனள யுபழ (ீஎவ) டுவன.)

- ஜே கே ரேட்லிங்க் தனியார் கம்பனி (துமு வுசளநட ைமெ ரீவை) டுவன.)
- அம்பாறை ஒன்றிணைந்த விவசாய கம்பனி (யுஅியசய நுமயடியனனாய புழளை ளுயபெயஅய டுவன.)

ஆ. இந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக வழங்கல்களில் தாமதம், வழங்கல்களுக்குரிய நியமங்கள் தொடர்பாக பிரச்சினைகளை எப்போதும் முகங் கொடுக்கவேண்டி ஏற்பட்டிருந்ததுடன், அதற்குரிய அவதானிப்புக்கள் பின்வரும் பந்திகளில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

### 3.4.2 வழங்குனர்களின் பௌதீக பரிசோதனை

அ. விவசாயிகளிடமிருந்து சோயா அவரை கொள்வனவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அதன் ஈரப்பத மட்டம் (ஆழளைவரசந அநவநச) இயந்திரம் மூலம் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதியில் உள்ளவாறு வாரத்திற்கு முன்னர் தொடக்கம் வழங்குனர் நிறுவனம் ஒன்றின் ஆழளைவரசந அநவநச இயந்திரம் செயற்பாடற்று காணப்பட்டமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

திரிபோஷா கம்பனியின் பிரதான நோக்கமான (ஆளைளழைெ) உள்நாட்டு விவசாயிகளை வலுவூட்டுதல் காண்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் சோயா அவரை விதைக்காக தீர்மானிக்கப்படுகின்ற விலை பிரதானமாக ஈரப்பத மட்டத்தின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது விவசாயிகளுக்கு நியாயமான விலையொன்றை செலுத்தியிருந்தா எனவும், திரிபோசா கம்பனியின் மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

ஆ. வழங்குனர் நிறுவனத்திற்குரிய சியம்பலாண்டுவ சோள களஞ்சிய பிரிவில் 7,500 மெற்றிக் தொன் இயலளவை உடைய பிரதான தானிய களஞ்சிய தாங்கிகள் (ளுடைழ) 2 காணப்பட்டதுடன், இந்த ளுடைழ இரண்டிலும் உள்ள சோளம், பொதியிடல் பிரிவிற்கு விநியோகிக்கப்படுகின்ற இடத்தில் நீண்ட காலம் முதல் நீர் தேங்கி நின்றமையின் காரணமாக பங்கசு மற்றும் பக்டீரியா பரவும் ஆபத்தொன்று அவதானிக்கப்பட்டமையினால் அந்த நிலைமை பொதியிடப்பட்ட சோள விதைகளிலும் பாதிப்பை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. (நிழற்படம் இலக்கம் 7, 8)




நிழற்படம் இலக்கம் 07- தானிய க்களஞ்சியத்தை சுற்றி நீர் நிறைந்து காணப்படும்

நிழற்படம் இலக்கம் 08- தானிய க்களஞ்சியத்தை சுற்றி நீர் நிறைந்து காணப்படும்

### 3.4.3 உற்பத்தியின் தரம்

#### 3.4.3.1 போஷணை மூலக்கூறுகளின் உள்ளடக்கம்

நிறுவனத்தினால் திரிபோஷா உற்பத்தியின் தரத்தினை நோக்காகக் கொண்டு உற்பத்தியின் இறுதி கட்டத்தின் போது பொதியிடுவதற்கு முன்னர் விற்றமின், கனியுப்புக்கள் மற்றும் பால்மா சேர்க்கப்படுகின்றது. அந்த போஷாக்கு மேலதிகத்தை சேர்ப்பதால் திரிபோஷா அதற்குரிய தரத்தில் காணப்பட்டதா என பரீட்சித்தல் 2018.05.23 ஆம் திகதிய இலக்கம்: SS 1802828, 2020.02.15 ஆம் திகதிய இலக்கம் 1909497 மற்றும் 2020.01.03 ஆம் திகதிய இலக்கம் 1918030 என்ற கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட பரிசோதனை அறிக்கையிலேயே இறுதி தடவையாக பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 100 கிராம் திரிபோஷாவில் அடங்கியிருக்க வேண்டிய போஷாக்கு மூலக்கூறுகளுக்குரிய மாதிரியுடன் ஒப்பீடு செய்யும் போது 07 வகையான மூலக்கூறுகளின் உள்ளடக்கத்தில் பற்றாக்குறையொன்றும் மற்றும் 2 வகையான மூலக்கூறுகளின் உள்ளடக்கத்தில் மிகையொன்றும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவற்றின் மிகையின் வீச்சு 42.5 சதவீதம் முதல் 200 சதவீதம் வரையிலாக இருந்ததுடன், பற்றாக்குறையின் வீச்சு 22 சதவீதம் முதல் 72 சதவீதம் ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| போஷணை மூலக்கூறுகள் | அலகு | மாதிரியின் பிரகாரம் மூலக்கூறுகள் | 2018.05.23 ஆம் திகதி அறிக்கை இலக்கம் : ளுளு 1802828 ஆம் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் (2018.01.30 ஆம் திகதி அனுப்பப்பட்ட மாதிரிகளின் பிரகாரம்) | | 2020.02.15 அறிக்கை இலக்கம் : ளுளு: 1909497 பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் (2019.07.03 ஆம் திகதி அனுப்பப்பட்ட மாதிரியின் பிரகாரம்) | | 2020.01.03 ஆம் திகதிய அறிக்கை இலக்கம் : 1918030 பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் (2019.12.04 இல் அனுப்பப்பட்ட மாதிரியின் பிரகாரம்) | | மாதிரியின் அடிப்படையில் பற்றாக்குறையின் சராசரி. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உள்ளடக்கம் | பற்றாக்குறை | உள்ளடக்கம் | பற்றாக்குறை | உள்ளடக்கம் | பற்றாக்குறை | அளவு | மூ |
| விற்றமின் டீ1 | அப.⁄.100ப | 1 அப | 0.67 அப | (0.33அப) | 0.9 அப | (0.1 அப) | பரிட்சிக்கப்படவில்லை - | - | (0.21 அப) | 22 |
| விற்றமின் டீ2 | அப.⁄.100ப | 2.1 அப | 0.47 அப | (1.63 அப) | 0.7 அப | (1.4 அப) | | - | (1.5 அப) | 72 |
| விற்றமின் ஊ | அப.⁄.100ப | 60 அப | 30.2 அப | (29.8 அப) | 40.2 அப | (19.8 அப) | | - | (24.8 அப) | 41 |
| விற்றமின் டீ5 | அப.⁄.100ப | 4 அப | 2.6 அப | (1.4 அப) | 3.6 அப | (0.4 அப) | | - | (0.9 அப) | 23 |
| இரும்பு | அப.⁄.100ப | 10 அப | 6.63 அப | (3.37 அப) | பரிட்சிக்கப்படவில்லை | - | 4.32 அப | (5.68 அப) | (4.52 அப) | 45 |
| சின்க் | அப.⁄.100ப | 11 அப | 6.54 அப | (4.46 அப) | பரிட்சிக்கப்படவில்லை | - | 7.8 அப | (3.2 அப) | (3.83 அப) | 35 |
| விற்றமின் டீ3 (யேைஉைை) | அப.⁄.100ப | 13 அப | 7.7 அப | (5.3 அப) | 10.4 | (2.6 அப) | பரிட்சிக்கப்படவில்லை | - | (3.95 அப) | 30 |

அட்டவணை இலக்கம் 05 - போஷணை மூலக்கூறுகளின் பற்றாக்குறை

| போஷாக்கு மூலக்கூறுகள் | அலகு | மாதிரியின் பிரகாரம் மூலக்கூறுகள் | 2018.05.23 ஆம் திகதி அறிக்கை இலக்கம் : ளுளு 1802828 ஆம் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் | | 2020.02.15 அறிக்கை இலக்கம் : ளுளு: 1909497 பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் | | மாதிரியின் அடிப்படையில் மிகையின் சராசரி. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | மூ |
| விற்றமின் நு | அப.⁄.100ப | 6 அப | 9.7 அப | 3.7 அப | 7.4 அப | 1.4 அப | 2.55 அப | 42.5 |
| விற்றமின் டீ 6 | அப.⁄.100ப | 1.8 அப | 5.51 அப | 3.71 அப | 5.4 அப | 3.6 அப | 3.655 அப | 200 |

அட்டவணை இலக்கம் 06 - போஷாக்கு மூலக்கூறுகளின் மிகை

#### 3.4.3.2 போஷாக்கு உள்ளடக்கத்தில் உள்ளடக்கப்படாதிருந்த மூலக் கூறுகள்

திரிபோஷா உற்பத்திக்குரிய மாதிரியின் பிரகாரம் 100 கிராம் திரிபோஷாவில் அடங்க வேண்டியிருந்த அயடீன் அளவு 60 மைக்ரோ கிராம் ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், தற்போது நிறுவனத்தினால் அயடீன் மூலக் கூறு போஷாக்கு மூலக்கூறு ஒன்றாக உற்பத்தியில் சேர்க்கப்படாதிருந்த போதும், 2020 யூன் மாதம் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது திரிபோஷா பொதியொன்றில் அயடீன் போஷாக்கு மூலக்கூறாக குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் திரிபோஷாக்களில் அத்தியவசிய மூலக்கூறுகளாக இனங்காணப்பட்டுள்ள அயடீன் உள்ளடக்கப்படாதிருந்தமை எதிர்பார்த்த போஷாக்கு மட்டத்தை பாதுகாக்கும் வகையில் உற்பத்தி மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்படுவதுடன், அவ்வாறு காணப்படும் போது மூலக்கூறுகள் திரிபோஷா உணவில் உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடப்பட்டமையினால் நுகர்வோர்களுக்கு அது தொடர்பாக பிழையான அனுபம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

#### 3.4.3.3 உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட நீர் தொடர்பாக பரிசோதனை

குடிநீர் தொடர்பாக இலங்கை மாதிரி ளுடுளு 614 : 2013 இன் பிரகாரம் குடிநீரில் அடங்கியுள்ள ஆகக் கூடிய தடையற்ற அமோனியா அளவு லீட்டர் ஒன்றிற்கு 0.06 மில்லி கிராம் ஆக இருந்த போதிலும், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட 2019.01.10 ஆம் திகதிய பரிசோதனை அறிக்கை இலக்கம் : 1819736 இன் மூலம் திரிபோஷா நிறுவனம் உற்பத்திக்காக பயன்படுத்துகின்ற நீரில் தடையற்ற அமோனியா அளவு லீட்டர் ஒன்றிற்கு 0.48 மில்லிகிராம் ஆக காணப்பட்டதுடன், மாதிரியுடன் ஒப்பிடும் போது 700 சதவீத மிகையொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

திரிபோஷாவில் அடங்கியுள்ள தடையற்ற அமோனியா உள்ளடக்கம் தொடர்பான மேலதிக பரிசோதனையின் போது கணக்காய்வாய்வினால் தெரிவு செய்யப்பட்ட குடிநீர் தெரிவு ஒன்று கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் பரீட்சிக்கப்பட்டதுடன், அது தொடர்பான அறிக்கை இலக்கம் : ளுளு 1918031 இன் மூலம் 2019.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன், அந்த அறிக்கையின் பிரகாரம் தடையற்ற அமோனியா அளவு லீட்டர் ஒன்றிற்கு 0.20 மில்லிகிராம் ஆக காணப்பட்டதுடன், அதில் மாதிரியுடன் ஒப்பிடும் போது 233 சதவீத அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.3.4 திரிபோஷாக்களில் நுண் போஷாக்கு உள்ளடக்கம் தொடர்பான சர்வதேச நியதிகள்

திரிபோசாக்களில் நுண் போஷாக்காக 11 விற்றமின்கள் மற்றும் 6 கனிய வகைகள் உள்ளடங்குகின்றது. 2012 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப அட்டவணைக்கு ஒப்பாக (ஹவவி:∴∴.றறற.றாழ.iவெ∴ரெவசவைழைெ∴ரிடிடiஉயவழைளெ∴அழனநசயவநஃஅயடரெவசவைழைெ∴9 7892415044 23 ∴ நெ ∴)இ திரிபோஷாக்களில் அடங்கியுள்ள சில விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்களின் மட்டம் உலக சுகாதார அமைப்பு பரிந்துரைசெய்த மட்டத்துடன் இணங்கியிருக்கவில்லை. மேலும், திரிபோஷா நிறுவனத்தின் மாதிரிகளின் பிரகாரம் 100 கிராம் திரிபோஷாவில் அடங்க வேண்டிய போஷாக்கு மூலக்கூறுகளின் அளவு பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் உள்ள படியாக காணப்பட்ட போஷாக்கு அளவாக இருந்ததுடன், பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

அதன் பிரகாரம் திரிபோஷா நிறுவனத்தின் மாதிரிகளின் பிரகாரம் 100 கிராம் திரிபோஷாவில் விற்றமின் யு மில்லிகிராம் 800 ஆக காணப்பட்ட வேண்டிய போதிலும், பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 502 மில்லிகிராம் அளவில் மாத்திரமே காணப்பட்டது. அது 298 மில்லிகிராம் குறைவானதாகும். அவ்வாறே விற்றமின் னு காணப்பட வேண்டிய அளவை விட 8.26 மில்லிகிராம் குறைவொன்றும், விற்றமின் நு 1.4 மில்லிகிராம் மிகையொன்றும், விற்றமின் ஊ 19.8 மில்லிகிராம் குறைவொன்றும் காணப்பட்டது.

அவ்வாறே கனிப்பொருட்களின் அளவுகளில் மேலே கூறப்பட்ட பிரகாரம் இணங்காமைகள் காணப்பட்டதுடன், அயடீன் 16 மில்லிகிராம் குறைவாகவும், இரும்பு 4.3 மில்லிகிராம் குறைவாகவும், சின்க் 7.65 மில்லிகிராம் குறைவாகவும், பொற்றாசியம் 600 மில்லிகிராம் குறைவாகவும், கல்சியம் 400 மில்லிகிராம் குறைவாகவும், பொஸ்பரஸ் 50 மில்லிகிராம் குறைவாகவும், மெக்னீஸியம் 10 மில்லிகிராம் மிகையாகவும் காணப்பட்டது. இது தொடர்பான விபரங்கள் அட்டவணை இலக்கம் 07 இல் காண்பிக்கப்படுகின்றது.

| நுண் போஷாக்கு | றுர்ழு தொழில்நுட்ப அட்டவணை 2012 (திரிபோஷா மா 100 கிராம் அளவின் பிரகாரம் 402 முஉயட அடங்கியிருந்தமை மாற்றப்பட்டிருந்தது) (ய) | திரிபோஷா நிறுவனத்தின் மாதிரியின் பிரகாரம் 100 கிராம் இல் அடங்கவேண்டிய அளவு (டி) | திரிபோஷா 100 கிராமில் அடங்கிய கலரி (வுழவயட ஐஉெடரனைபெ வைவெசளைஉ உைை) (பரிசோதனை அறிக்கையின் பிரகாரம்) | | றுர்ழு தெழில்நுட்ப நியமங்களுக்கு இணங்காமை. (ய-ன) | திரிபோசா மாதிரிகளுக்கு இணங்காமை. (டி-ன) |
|---|---|---|---|---|---|---|
| | | | முன்னர் காணப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் (உ) | புதிய பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் (ன) | | |
| விற்றமின்கள் -------------------- | | | | | | |
| விற்றமின் யு (அப) | 804-1206 | 800 | 520 | 502 | 302 | 298 |
| விற்றமின் னு (அப) | 8-24.1 | 15 | 5 | 6.74 | 1.26 | 8.26 |
| விற்றமின் நு(அப) | >3.4 | 6 | 6.3 | 7.4 | 6 | ** 1.4 |
| விற்றமின் ஊ(அப) | >60.3 | 60 | 42 | 40.3 | 20.1 | 19.8 |
| கனியுப்புக்கள் --------------------- | | | | | | |
| அயடீன்(அப) | 60.3-140.7 | 60 | 44 | பரீட்சிக்கப்படவில்லை | 16.3 | 16 |
| இரும்பு(அப) | 7.2-12.1 | 10 | 24.5 | 5.7 | 1.5 | 4.3 |
| சின்க்(அப) | 8-14.1 | 11 | 6 | 3.35 | 4.65 | 7.65 |
| பொட்டாசியம்(அப) | 603-884 | 900 | 768.4 | 300 | 303 | 600 |
| கல்சியம்(அப) | 400-563 | 500 | 1015 | 100 | 300 | 400 |
| பொஸ்பரஸ்(அப) | 342-563 | 450 | 1043 | 400 | - | 50 |
| மக்னீசியம்(அப) | 112.6-168.8 | 100 | 266.4 | 110 | **2.6 | **10 |

ழுழு மாதிரியின் பிரகாரம் காணப்பட வேண்டிய அளவை விட அதிகரித்து காணப்பட்ட அளவு

அட்டவணை இலக்கம் 07 – திரிபோஷாக்களில் உள்ளடக்கம் உலக சுகாதார அமைப்பு நியமங்களுடன் ஒப்பீடு.

அட்டவணை: ழு றுர்ழு தொழில்நுட்ப அட்டவனை, 2012. சிறுவர்கள் மற்றும் 6 மாதம் - 59 மாதங்களுக்கு இடையிலான பிள்ளைகள் மற்றும் நடுத்தர கடுமையான மந்தபோசணையைக் கட்டுப்படுத்துவதற்கான மேலதிக உணவு.

### 3.4.4 உற்பத்தி பிரிவின் தரக் கட்டுப்பாடு

#### 3.4.4.1 திரிபோஷா கடதாசி உறைகளில் (ஆயளவநச டியப) பொதியிடல்

கம்பனியினால் திரிபோஷா பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளுக்காக க்ர்ப்பிட் கடதாசி மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கமதாசி உறைகளில் 750 கிராம் திரிபோஷா பக்கட்டுக்கள் 30 வீதம் பொதியிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த பொதிகளை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு தேவையான ஆலோசனைகள் பின்வருமாறு இருந்தது.

அ. ஈரப்பதனை உறிஞ்சாத வகையில் களஞ்சியப்படுத்த வேண்டியமை.

ஆ. மரப்பலகையில் களஞ்சியப்படுத்த வேண்டியமை.

இ. களஞ்சியப்படுத்த வேண்டிய வெப்ப நிலை வீச்சு போன்வை.

இது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படாமையின் காரணமாக திரிபோஷா இருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றமை மற்றும் தரத்தில் குறைவு ஏற்படும் அபாயமொன்று காணப்பட்டதுடன், ளுடுளு 143 : 1999 நியமத்தின் 10.3 பந்தியில் உள்ள பிரகாரம் பொதியிடுவதற்காக உரிய நியமங்கள் பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட சுகாதார வைத்திய சேவை உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் தாய்சேய் சிகிச்சை நிலையங்களை பரிசோதனை செய்யும் போது திரிபோஷா களஞ்சியப்படுத்தல் மேலே காண்பிக்கப்பட்ட பிரகாரம் களஞ்சியப்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

#### 3.4.4.2 திரிபோஷா களஞ்சியப்படுத்தல்

திரிபோஷா பக்கட் களஞ்சியப்படுத்த வேண்டிய பொருத்தமான வெப்பநிலை செல்ஸியஸ் 20 – 22 வீச்சில் இருக்க வேண்டிய போதிலும், செல்ஸியஸ் 25 – 27 இல் களஞ்சியப்படுத்துதல் திட்டமிடப்பட்ட போதிலும், திரிபோஷா களஞ்சியத்தில் உள்ளக வெப்பநிலை அதனை விட அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன், உலர் கால நிலையுடன் மழை காலநிலையும் காணப்பட்ட கணக்காய்வு திகதியான 2019 ஒக்தோபர் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது திரிபோஷா களஞ்சியத்தில் காணப்பட்ட வெப்ப நிலை 28.2 செல்ஸியஸ் அளவாக இருந்தது. களஞ்சியத்தின் வெப்பநிலை தேவையினை விட உயர் மட்டத்தில் காணப்பட்டதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட இருப்புக்களில் உள்ளடக்கப்பட்ட போசணை தரங்களுக்கு பாதிப்பு ஏற்படும் ஆபத்தொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2020.06.25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது திரிபோஷா களஞ்சியத்தில் உள்ளக வெப்பநிலை 33.4 செல்ஸியஸ் அளவாக காணப்பட்டது.

### 3.4.5 பொதியிடல் பிரிவு

லங்கா திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் பொதியிடல் பிரிவில் 8 பொதியிடல் இயந்திரங்கள் காணப்பட்டதுடன், அதில் 4 இயந்திரங்கள் திரிபோஷா உற்பத்தியிலும் 4 இயந்திரங்கள் சூபோஷா உற்பத்திக்கும் பயன்படுத்தப்பட்டதுடன், இந்த பொதியிடல் இயந்திரத்திற்காக தேவையான திரிபோஷா மற்றும் சூபோஷா பூர்த்தி உற்பத்தி இயலளவு 10.5 மெற்றிக் தொன் ஆன 03 களஞ்சிய தாங்கிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### 3.4.5.1 திரிபோஷா மற்றும் சூபோஷா பூர்த்தி உற்பத்தி (பொதியிடலுக்கு முன்னர்) களஞ்சிய தாங்கி)

அ. திரிபோஷா மற்றும் சூபோஷா பொதியிடுவதற்கு முன் களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட மூன்று தாங்கிகளும் பைபர் கிளாஸ் (குடைநச படயளள) மூலம் தயாரிக்கப்பட்டிருந்த 35 தொடக்கம் 40 வருடங்களுக்கு இடையிலான பழைய தாங்கிகளாக இருந்தமையின் காரணமாக அதன் உடபுறமும் வெளிப்புறமும் உடைந்து மற்றும் பழுதடைந்து காணப்பட்டது. இதன் காரணமாக அதன் உள் இடங்களில் பூர்த்தி உற்பத்தி தாங்கிகளில் சில காலம் வைக்கப்பட்டிருந்தமையினால் எறும்புகள், புழுக்கள் ஏற்படக்கூடியதாக இருந்தமை மற்றும் பைபர் துண்டுகள் பூர்த்தி உற்பத்திகளில் கலந்து நுகர்வோரின் உடலுக்குள் செல்வதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டமை தொழிற்சாலை பௌதீக பரிசோதனைகளின் போதும் மற்றும் தொழிற்சாலை முகாமையாளர் சமர்ப்பித்த பணிப்பாளர் சபை குறிப்பு (குறிப்பு இலக்கம் 03.˙.82.˙.02) பரிசோதனையின் போது கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

ஆ. மேற்கூறப்பட்ட பூர்த்தி உற்பத்தி தாங்கிகளின் உள்ளேயும் வெளியேயும் பழுதடைந்தமை காரணமாக அவற்றின் பூர்த்தி உற்பத்தி (மா) இலகுவாக பயணம் செய்ய முடியாமையினால் தாங்கியின் ஓரத்தின் மூலம் தட்டுதல் மற்றும் இரும்பு கூரொன்றைப் பயன்படுத்தி உராய்வதன் மூலம் உற்பத்தியை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த செயற்பாடுகளின் காரணமாக பூர்த்தி உற்பத்தியுடன் பைபர் துண்டுகளும் கலக்கக் கூடியதாக இருந்தமை மிகவும் அதிகமாகவும் மற்றும் அந்த தாங்கி மேலும் மேலும் பழுதடைந்து செல்வதாக இருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. (நிழற்பட இலக்கம் 09)



நிழற்பட இலக்கம் 09 - பூர்த்தி உற்பத்தி தாங்கி

### 3.4.5.2 பொதியிடல் இயந்திரங்களின் செயற்படு நிலை

அ. பூர்த்தி உற்பத்தித் தாங்கிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கலவைகள் பொதியிடல் இயந்திரங்களுக்கு வழங்கும் செயற்பாடுகளுக்கு இடையில் இந்த கலவைகள் பொலித்தீனால் தயாரிக்கப்பட்ட குழாய் ஊடாக கொண்டு செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், இது இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் புநநெசயட ீசைஉெனியட ழக குழழன ர்லபறைநெ (ளுடுளு 143:1999) நியமங்களுக்கு இணங்காதிருந்த நிலையாகும். (நிழற்பட இலக்கம் 10, 11)



நிழற்பட இலக்கம் - 10



நிழற்பட இலக்கம் - 11

கலவைகள் பொலித்தீனால் தயாரிக்கப்பட்ட குழாய் ஊடாக கொண்டு செல்லல்

ஆ. மேலும், மேற்கூறப்பட்ட பொதியிடல் இயந்திரங்களின் செயற்படுநிலைக்கு கொண்டுவருவதற்கும் மற்றும் வெளியேற்றுவதற்கும் பயன்படுத்தப்பட வேண்டிய நியமமிடப்பட்ட இறப்பர் உறைகள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவனம் அதற்குப் பதிலாக தற்காலிக முறைமையாக திரிபோஷா பொதியிடல் பக்கட்டுக்களை பாவித்து இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், நியமமிடப்பட்ட உற்பத்தி திட்டம் பின்பற்றுவதில் பற்றாக்குறையொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. (நிழற்பட இலக்கம் 12)



நிழற்பட இலக்கம் 12 - தற்காலிகமான முறையாக திரிபோஷா பொதியிடல் பக்கட்டுக்கள் பயன்படுத்துதல்.

### 3.4.6 ஐளுழு 22000 ∴ ர்யுஊஊீ தரச் சான்றிதழ்

அ. இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தினால் தமது உற்பத்திக்காக ஐளுழு 22000 மற்றும் ர்யுஊஊீ என்ற தரச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு மதியுரை நிறுவனத்தின் உதவியினை பெற்றுக்கொள்வதற்கு 2017.02.14 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அதற்காக ஆகக் குறைந்த விலை ரூபா 250,000 தொகை சமர்ப்பிக்கப்பட்ட போதும், ஹெலியோன் தனியார் கம்பனி (ர்யடநலழெ ீசளையவந டுஅவைநன) நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதுடன், அந்த நிறுவனம் 2017 மார்ச் 01 ஆம் திகதி திரிபோஷா தொழிற்சாலை சுற்றாடலில் பௌதீக ரீதியில் அவதானிக்கப்பட்ட ஆரம்ப இடை வெளி அறிக்கையொன்று (ஐவைையட புயி சுநிழசவ) 2017 மார்ச் 15 ஆம் திகதி கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை வழங்கப்பட்ட கணக்காய்வு திகதியான 2019 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 02 வருடங்கள் கடந்திருந்த போதும், அந்த அறிக்கையில் கீழே குறிப்பிடப்படுகின்ற செயற்பாடுகளை சரி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஆ. திரிபோஷா உற்பத்தி சாதாரண கழிவுகள் விலங்கு உணவாக விற்பனை செய்யப்படும் வரை திரிபோஷா பூர்த்தி உற்பத்தி களஞ்சியத்தின் பின் பக்கத்தில் உறைகளில் இட்டு பொதியிடப்பட்டிருந்ததுடன், அந்த உறைகளில் இருந்து சுற்றாடலுக்கு கழிவுகள்

கசிந்தமையினால் நீர் கசிவு ஏற்பட்டமையினால் தொழிற்சாலைகளின் சுற்றாடலில் அத்தியவசியமான கட்டுப்படுத்த வேண்டிய உயிரினங்கள் பெருகுவதற்கான (புறாக்கள் மற்றும் எலிகள்) சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், 2020 யூலை 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போதும் மேற்கூறப்பட்ட அவதானிப்புகள் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4.7 எஸ் எல் எஸ் (ளுடுளு) சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் தொடர்பான பரிசோதனை

அ. திரிபோஷா கம்பனி இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் மூலம் கையளிக்கப்பட்ட உணவு உற்பத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக எஸ் எல் எஸ் (ளுடுளு) சான்றிதழை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் செயற்படுகின்றது. அதற்காக இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் நியம இலக்கம் 143 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அதன் மூலம் உரிய உற்பத்தியின் சுகாதார பாதுகாப்பு தன்மை மற்றும் நம்பகத்தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றது.

ஆ. மேற்கூறப்பட்ட நியமத்தின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ∴ அடிப்படை உற்பத்தியின் போது (மூலப்பொருள் உற்பத்தியின் போது) அதனை சுகாதாரமான முறையில் (ர்லபநைநெ) எடுத்துச் செல்லும் வகையில் அதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற மூலப் பொருட்களை பரவுதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் போக்குவரத்திற்குரியதாக பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றது.

இ. திரிபோஷா லிமிடெட் கம்பனி திரிபோஷா மற்றும் சூபோஷா தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருளாக சோளம் மற்றும் சோயா போன்ற தானிய வகைகள் பயன்படுத்தப்படுகின்றது. 2019 செப்தெம்பர் 25 ஆம் திகதி அந்த கம்பனியின் களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

   ை. திரிபோஷா லிமிடெட் கம்பனிக்கும் மேற்கூறப்பட் கம்பனிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தானியங்களை பொதியிடும் போது பொதியிடல், உரம் மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்கள் பொதியிடப்படாதிருந்த உறைகளாக வேண்டியருந்த போதிலும், மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு தானியங்களை வழங்குகின்ற விவசாயிகள் பசளை பொதியிடப்பட்டிருந்த உறையில் தானியத்தை பொதியிட்டு வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.



நிழற்பட இலக்கம் 13 - விவசாயிகள் பசளை பொதியிடப்பட்டிருந்த உறையில் தானியத்தை பொதியிட்டு பயன்படுத்தப்படுகின்ற விதம்

ஐ. தானியங்களை சுத்தம் செய்வதற்கும், பொதியிடுவதற்கும் தானிய இயந்திரத்தில் உள்ளடக்கப்படுகின்ற இடம் நில மட்டத்திற்கு கீழ் இரும்பு கம்பி வலையுடன் கீழே விழுகின்றவாறு மற்றும் நிரந்தரமாக கீழ்நோக்கி அமைக்கப்பட்டமையின் காரணமாக மக்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமில்லாத பொருட்கள், எலி அல்லது எறும்பு போன்ற பிராணிகள் உள்ளே விழுந்து தானியங்களுடன் கலக்கும் இயலுமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.



நிழற்பட இலக்கம் 14 – தானியம் இயந்திரத்தில் உட்படுத்துகின்ற இடம்

இ. இலங்கை நியமங்கள் இலக்கம் 143 இன் பிரகாரம் திரபோஷா கம்பனியின் உற்பத்தி செயற்பாடுகளில் கீழே குறிப்பிடப்பட்டுகின்ற நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட நியமத்தின் 5.1.2 இன் பிரகாரம் இயந்திர கூடத்திற்காக போதியளவான பராமரிப்பு நடவடிக்கைகளை பேணிச் செல்லல் மற்றும் இட வசதியுள்ள சூழலொன்றை கட்டியெழுப்ப வேண்டிய போதிலும், தொழிற்சாலையில் அவற்றிக்கு இணங்காத பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

ை. இயந்திர கூடத்தில் தானியங்களை அரைக்கும் போது வெளியேறுகின்ற சிறு துண்டுகள் (தூசுகள்) கணிசமான அளவில் வெளியில் கலந்து காணப்பட்டது. அது இயந்திரக்கூடத்தின் ஊழியர்களின் சுகாதார நிலைக்கு நேரடியாக பாதகமாக தாக்கம் செலுத்துகின்றது.

ைை. அரைக்கப்பட்ட தானியம் குழாயின் மூலம் அவிக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட உணவுகள் முனகொண்டு செல்கின்ற பட்டியின் மூலம் ஆரம்ப இடம் நில மட்டத்தில் இருந்து 12 அங்குல அளவிலான உயரத்தில் காணப்பட்டதுடன், அந்த இடம் நிரந்தரமாக சமாந்தரமாக அமைக்கப்பட்டமையின் காரணமாக உற்பத்தியில் தூசுகள், சிறிய எறும்புகள் அல்லது வேறு ஏதேனும் ஒன்று உள்ளடங்கும் அபாயமொன்று காணப்பட்டது.

### 3.5 திரிபோஷா உற்பத்தியை பகிர்ந்தளித்தல்

திரிபோஷா பகிர்ந்தளித்தல் தொடர்பாக அவதானிப்புக்களுக்கு உட்படுத்திய போது திரிபோஷா நிறுவனங்களில் பெறப்பட்ட தகவல்கள், சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களில் பெறப்பட்ட தகவல்களை போல தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் சிறுவர்கள் மற்றும் தாய் பராமரிப்பு நிலையங்கள் தெரிவுப் பரிசோதனை சுற்றுலாவில் உள்ளடக்கப்பட்டிருந்தது. (இணைப்பு இலக்கம் 04)

#### 3.5.1 திரிபோஷா விநியோகித்தல்

திரிபோஷா நிறுவனத்தினால் திரிபோஷா நலனாளிகளின் எண்ணிக்கையை நாளதுவரையாக்குவதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற வினா கொத்துக்களின் பதிலின் பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளை கவனத்தில் கொள்ளும் போது திரிபோஷா தேவையின் பிரகாரம் விநியோகிக்கப்படல் இடம் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்குரிய திரிபோஷா பக்கட்டுக்கள் 23 மில்லியனுக்கும் 24 மில்லியனுக்கும் இடையிலான அளவொன்று கோரப்பட்டிருந்ததுடன், திரிபோசா நிறுவனம் வழங்கிய தரவுகளின் பிரகாரம் 15 மில்லியனுக்கும் 16 மில்லியனுக்கும் இடைப்பட்ட அளவே விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 8 மில்லியன் பக்கட்டுக்கள் அளவில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டிற்குரியதாக கோரப்பட்ட 24 மில்லியன் பக்கட்டுக்களுக்காக 16 மில்லியன் பக்கட்டுக்களே வழங்கப்பட்டிருந்ததுடன், அது அவ்வாண்டிற்குரியதாக 8 மில்லியன் அளவான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தெரிவது யாதெனில் திரிபோஷா நிறுவனத்தின் மூலம் திரிபோஷா விண்ணப்பத்திற்கு நிகரான

வகையில் திரிபோஷா உற்பத்திசெய்து விநியோகிக்கப்படாதிருந்தமை நாங்கள் தெரிவு செய்த மாகாணங்களின் சிகிச்சை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு சுற்றுலாவில் இந்த அவதானிப்புக்கள் மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே நிலுவையொன்று ஏற்படுவதை தவிர்ப்பதற்காக நிறுவனத்தினால் முக்கயமாக திரிபோஷா பகிர்ந்தளிக்கும் போது ஏற்படுகின்ற கஷ்டங்களை மாற்றியமைப்பதற்கு லொறி வாகனங்களில் அந்தந்த மாவட்டங்களின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு திரிபோஷா இருப்புகளை அனுப்புவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு இனங்கியிருந்தனர்.

அதன் பிரகாரம் நிறுவனத்தினால் கேள்வி கோரல் பெறப்பட்டு லொறி வாகனம் மற்றும் சுகாதார அமைச்சின் வைத்திய வழங்கல் பிரிவினால் பெறப்பட்ட லொறி வாகனத்தின் மூலம் திரிபோஷா பகிர்ந்தளிக்கும் போது தாமதமின்றி மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் எதிர்வரும் வருடங்களின் போது திரிபோஷா கோரிக்கைகள் மற்றும் பகிர்ந்தளித்தல் இடையே காணப்படுகின்ற நிலுவைகளை குறைப்பதற்கு முடியுமாக இருக்கும் என நிறுவனத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.5.2 திரிபோஷா பகிர்ந்தளித்தல் தொடர்பான சுற்றறிக்கைகளின் நியதிகளுக்கு புறம்பாக இருந்தமை

திரிபோஷா பகிர்ந்தளித்தல் மற்றும் நலனாளிகளை தெரிவு செய்தல் தொடர்பான பொது சுற்றறிக்கை 01-04.׃.2016 இன் பிரகாரம் சகல கர்ப்பிணி தாய்மார்களும் திரிபோஷா நலனாளிகளாக கருதப்பட்ட போதிலும், எங்களது அவதானிப்பு சுற்றுலாவில் ஈடுபடுத்திய பலப்பிட்டிய சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்குரிய பலப்பிட்டி தள வைத்தியசாலையில் காணப்பட்ட தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையத்தில் கர்ப்பிணி தாய்மார்களின் நிறையினை கவனத்தில் கொண்டு தாய்மார்களின் நிறை 42முப இற்கு குறைவானதாயின் மாத்திரம் திரிபோஷா வழங்கப்பட்டிருந்தது. (இணைப்பு - 03)

### 3.5.3 சிகிச்சை நிலையங்களில் தொடரபுடைய ஆவணங்களை பேணிச்செல்லல்

சிகிச்சை நிலையங்களுக்கு திரிபோஷா கோருதல், பெறுவனவுகள் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லும் அவற்றில் குறைபாடுகள் காணப்பட்டன.

#### 3.5.3.1 திரிபோஷா இருப்பு புத்தகம் பேணிச் செல்லல்

அ. திரிபோஷா இருப்பு புத்தகம் பேணிச் செல்லல் தொடர்பான பரிசோதனையின் போது தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சிகிச்சை நிலையங்களில் திரிபோஷா இருப்பு புத்தகம் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

ஆ. ராஜகிரிய தாய் சேய் சிகிச்சை நிலையத்தின் இருப்பு புத்தகங்களும் இவ்வாறு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக இருப்பு புத்தகத்தின் பதிவுகள் மற்றும் அதனை சமப்படுத்தல் பூர்த்தி செய்யப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. மேலும், பன்னல

தாய் சேய் பராமரிப்பு நிலையத்திலும் இவ்வாறு இருப்பு புத்தகங்கள் சமப்படுத்துதல் பூரணமின்றி காணப்பட்டது.

அவ்வாறே பௌதீக இருப்பையும் இருப்பு புத்தக மீதிகளையும் ஒப்பீடு செய்து பற்றாக்குறைக்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்படாதிருந்ததுடன், சில சிகிச்சை நிலையங்களின் பௌதீக இருப்பில் பற்றாக்குறை காணப்பட்டது. விபரம் பின்வருமாறு

| நிலையங்கள் | பற்றாக்குறை |
|---|---|
| மாவட்ட வைத்தியசாலை - மீகஹதென்ன | 01 |
| தள வைத்தியசாலை - பலப்பிட்டி | 01 |
| சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் - அம்பலாங்கொடை | 06 |
| சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் - நாவலை | 10 |
| சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் ருக்மல்கம | 04 |

மேலும் ருக்மல்கம தாய்மார்களின் சிகிச்சை நிலையத்தில் திரிபோஷா பெறுகை பதிவேடு, விநியோகித்தல் பதிவேடு மற்றும் திரிபோஷா மாதாந்த நலனாளிகள் மற்றும் இருப்பு (எம்.பீ.ஐ) அறிக்கை தயாரிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்ட மாதாந்த பொழிப்பு தொடர்பான பரிசோதனையின் போது கணக்காய்வு திகதியில் உள்ளவாறு காணப்பட வேண்டிய திரிபோஷா பக்கட்டுக்கள் 961 ஆக இருக்க வேண்டிய போதிலும், பௌதீக உள்ளபடியான திரிபோஷா பக்கட்டுக்களின் எண்ணிக்கை 1347 ஆக இருந்ததுடன், மிகை 386 பக்கட்டுக்களாக காணப்பட்டது. அது தொடர்பாக மேலதிக பரிசோதனையின் போது 2019 யூலை 31 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற 990 திரபோஷா பக்கட்டுக்களின் இருப்பு 600 ஆக திரிபோஷா பெறுவனவு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், யூலை மாதம் திரிபோஷா மாதாந்த நலனாளிகள் மற்றும் இருப்புக்கள் (எம்.பீ.ஐ) அறிக்கையின் பிரகாரமும் திரிபோஷா பக்கட்டுக்கள் 600 இற்கு சமப்படுத்தப்பட்டிருந்ததுடன், மாத இறுதியின் போது முன்கொண்டு செல்லப்படுகின்ற இருப்பும் பூச்சியமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.5.3.2 திரிபோஷா மாதாந்த நலனாளிகள் மற்றும் இருப்பு (எம்.பீ.ஐ) அறிக்கை

இந்த அறிக்கை தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

- பௌதீக இருப்பு காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் இந்த அறிக்கையின் பௌதீக இருப்பு உள்ளடக்கப்படுகின்ற பகுதியின் தொகை இருப்பு பூச்சிய பெறுமதியாக

அம்பலாங்கொடை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில் பதியப்பட்டிருந்தது.

- வவுனியா சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்குரிய சகல சிகிச்சை நிலையங்களிலும் 2019 பெப்ரவரி மாதத்தின் பின்னர் (எம்.பீ.ஐ) அறிக்கை வவுனியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- மினுவாங்கொடை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தினால் கையேற்றல் சான்றிதழ் உரிய பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு திரிபோஷா நிறுவனத்திற்கு அனுப்பப்படாமல் உரிய சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பார்க்கின்ற போது திரிபோஷா இருப்பு தொடர்பான அறிக்கை பேணிச் செல்லல் தொடர்பாக போதியளவான உள்ளக கட்டுப்பாடொன்று பேணப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக கையிலுள்ள இருப்பு அளவுகள் பதிவேடுகளில் பதியப்பட்டமை காரணமாக இருப்புக்கள் காலாவதியாகும் அல்லது பயன்படுத்துவதற்கு முடியாமை தொடர்பான அபாயமொன்று காணப்பட்டது.

இந்த அபாயம் மற்றும் நலிவுகளை மாற்றியமைக்கும் நோக்காகக் கொண்டு திரிபோஷா இருப்பு புத்தகங்களை பேணிச் செல்லல் மற்றும் திரிபோஷா மாதாந்த நலனாளிகளின் இருப்பு அறிக்கையை பேணிச் செல்லல் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள் ∴ நிறுவனத்திற்கு பொறுப்பான வைத்திய உத்தியோகத்தர்கள் ஊடாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைந்ததாக உள்ள வைத்திய உத்தியோகத்தர் (தாய் சேய் சுகாதார) மற்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணியாளருக்கு சொந்தமாக இருந்தமையும் எதிர்காலத்தில் இது தொடர்பாக ஆலோசனைகள் வழங்குவதற்கும் நிரந்தரமாக மேற்பார்வையினை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

### 3.5.4 திரிபோஷாக்களின் பாதுகாப்பினைப் பெறும் வகையில் சுகாதார வைத்திய சேவைகள் உத்தியோகத்தர் அலுவலங்களிலும், தாய் சேய் சிகிச்சை நிலையங்களிலும் திரிபோஷாவை களஞ்சியப்படுத்துதல்.

திரிபோஷாவை களஞ்சியப்படுத்தும் போது திரிபோஷாக்களின் தரத்தினை பாதுகாக்கும் வகையிலும் அதில் குறிப்பிடப்பட்ட காலாவதியாகும் காலத்தினுள் அந்த உற்பத்திற்கு சேதமொன்று ஏற்படாத வகையிலும் திரிபோஷா களஞ்சியப்படுத்தி வைக்கப்பட வேண்டும்.

திரிபோஷா களஞ்சியத்தில் அனுமதியற்ற நபர்களுக்கு உள்நுழைவதற்கு முடியாத வகையில் பூட்டுக்கள் இட்டு அமைக்கப்பட்ட களஞ்சியமாக இருக்க வேண்டியதுடன், களஞ்சியப்படுத்தும்

போது ஆதாரமாக (மரப்பலகை) ஈடுபடுத்தப்பட வேண்டும். இவ்வாறு மரப்பலகையின் அடிப்படையில் திரிபோஷா களஞ்சியப்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

தாய் பராமரிப்பு நிலையம் - சந்தலங்காவ



நிழற்பட இலக்கம் 15 – திரிபோஷா பக்கட் நிலத்தில் பரவி காணப்படுகின்ற விதம்.

சுகாதார வைத்திய சேவைகள் உத்தியோகத்தர் அலுவலகம் - மினுவாங்கொடை.





நிழற்பட இலக்கம் 16 - நிலத்தில் பரவி வைக்கப்பட்டுள்ள திரிபோஷா பக்கட்டுக்கள்.

நிழற்பட இலக்கம் 17 - திரிபோஷா களஞ்சியம்

தாய் பராமரிப்பு நிலையம் - ருக்மல்கம.



வரைபட இலக்கம் 18 - நிலத்தில் பரவி வைக்கப்பட்டுள்ள திரிபோஷா பக்கட்டுக்கள்.

மேலும் திரிபோஷா களஞ்சியத்தில் திரிபோஷா களஞ்சியப்படுத்தப்படுகின்ற மரப்பலகையில் ஏனைய பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

மீகொடை தாய் சேய் பராமரிப்பு நிலையம்



நிழற்பட இலக்கம் 19 - மரப்பலகையில் ஏனைய பொருட்கள் பரவி வைக்கப்பட்டமை.

சிறுவர் தாய் சேய் பராமரிப்பு நிலையம் - கலகெதர.



நிழற்பட இலக்கம் 20 - மரப்பலகையில் ஏனைய பொருட்கள் பரவி வைக்கப்பட்டமை.



நிழற்பட இலக்கம் 21 - மரப்பலகையில் ஏனைய பொருட்கள் பரவி வைக்கப்பட்டமை.

மேலும், ருக்மல்கம சிகிச்சை நிலையத்தில் தடுப்பூசி அறை மற்றும் தாய்மார்கள் வைத்தியர்களை சந்திப்பதற்காக காத்திருக்கின்ற சூழல்களிலும் திரிபோஷா களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த விதம் அவதானிக்கப்பட்டது. (நிழற்பட இலக்கம் 22)

தாய் சிகிச்சை நிலையம் - ருக்மல்கம



நிழற்பட இலக்கம் 22 - தடுப்பூசி அறை மற்றும் தாய்மார்கள் வைத்தியர்களை சந்திப்பதற்காக காத்திருக்கும் இடத்தில் திரிபோஷா களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தமை.

### 3.6 திரிபோஷா போக்குவரத்து செய்தல்

திரிபோஷா நிறுவனத்தில் இருந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலங்களுக்கு திரிபோஷா கொள்கல வண்டிகளின் மூலம் போக்குவரத்து செய்யும் போது திரிபோஷா நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட இருப்புக்களுக்கும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கிடைத்த இருப்புக்களுக்கும் இடையே பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை பிரதானமாக யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட இருப்புக்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மாதம் | திரிபோஷா நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட்ட இருப்புக்கள் (மாஸ்டர் பேக்) | சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைத்த இருப்புக்கள் (மாஸ்டர் பேக்) | பற்றாக்குறை (மாஸ்டர் பேக்) |
|---|---|---|---|
| 2019 சனவரி | 1571 | 1567 | 04 |
| 2019 யூன் | 1674 | 1666 | 08 |

### 3.7 திரிபோஷா உற்பத்தி பகிர்ந்தளித்தல் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த மேற்பார்வை

#### 3.7.1 திரிபோஷா பகிர்ந்தளித்தலின் ஒட்டுமொத்த செயலாற்றல் மேற்பார்வை

திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தின் ஒட்டு மொத்த செயலாற்றலையும் பேணிச் செல்வதற்கான திட்ட மேற்பார்வை முறைமையொன்று காணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

அதனால், நிகழ்ச்சித் திட்டத்தின் உற்பத்தி, பகிர்ந்தளித்தல், களஞ்சியப்படுத்துதல், அறிக்கை பேணிச் செல்லல் போன்ற செயற்பாடுகள் முறையாக மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரோ அல்லது நிறுவனமோ பெயரிடப்பட்டு பேணிச் செல்லுதல் முக்கியமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மேலும், மினுவாங்கொடை சுகாதார வைத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- சுகாதார வைத்திய நிலையத்தினால் திரிபோஷா கையேற்றல் சான்றிதழ் உரிய பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு திரிபோஷா நிறுவனத்திற்கு வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் மூலம் உரிய சுகாதார வைத்திய நிலையங்களுக்குரிய இருப்புக்கள் சரியான பிரகாரம் பெறப்பட்டமைக்கான உறுதிப்படுத்தலொன்று திரிபோஷா நிறுவனத்திற்கு கிடைக்கவில்லை. (இணைப்பு இலக்கம் - 04)

- சுகாதார வைத்திய நிலையத்தினால் ஆடீஜ அறிக்கை பூரணப்படுத்தும் போது கிடைத்த இருப்பாக கிடைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட இருப்பு குறிப்பிடப்பட்டமையினால் இருப்பு அறிக்கை மூலம் உரிய சுகாதார நிலையங்களில் எவ்வளவு இருப்பொன்று உள்ளபடியாக எஞ்சி காணப்படுகின்றது என்பது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு சரியான திட்ட முறைமையொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. (இணைப்பு இலக்கம் - 05)

உலக சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் உத்தியோகத்தர்கள் கலந்துரையாடும் போது திரிபோஷா போன்ற உதவி திட்டங்களை அமுல்படுத்துகின்றமையினால் உரிய உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் செயற்பாடுகளுக்கு பங்குபற்றுகின்ற தரப்பினர்கள் (சுகாதார நிலைய உத்தியோகத்தர்கள், குடும்ப சுகாதார தாதியர்கள், திரிபோஷா நிறுவனத்தின் அதிகார தரப்பினர்கள், சுகாதார அமைப்பின் திரிபோஷா சம்பந்தமான உத்தியோகத்தர்கள்) இடையே நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை பரிமாரிக் கொள்ளும் திட்ட முறைமையொன்று அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது. இதற்காக தொடர்புடைய தரப்பினருக்கு சிறிய அளவிலான கையடக்கத் தொலைபேசி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை பரிமாரிக் கொள்ளும் திட்ட முறைமையொன்று அமுல்படுத்த முடியுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் மூலம் திரிபோஷா உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் செயற்பாடுகளின் செயற்திறனை மேலே கட்டி எழுப்புவதற்கும் அதன் மூலம் திரிபோஷா தேவைகளில் இனங்காணப்படுகின்ற திரிபோஷாவை பற்றாக்குறையின்றி தேவையான தரப்பினருக்கு விரைவாக வழங்குவதற்கும் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான சிறிய கையடக்கத் தொலைபேசி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தமை அவர்களினால் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இலங்கை திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தில் இது வரையிலும் அமுல்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.7.2 திரிபோஷா நலனாளிகளின் குழந்தைகளின் செயல்முன்னேற்றம்

உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய அறிக்கை மற்றும் அந்த உத்தியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஏனைய நாடுகளில் சுபர் சீரியல் பிளஸ் தானிய ரீதியிலான உணவு மந்த போசணை நிலையில் வாடுகின்ற சிறுவர்களுக்காக தினம் ஒன்றிற்கு 100 – 200 கிராமிக்கு இடையிலான அளவொன்று 02 மாதங்கள் முதல் 03 மாத காலத்திற்கு வழங்கப்படுவதுடன், அதில் செயல் முன்னேற்றமொன்றை காண்பிக்காத சிறுவர்கள் ஏனைய வைத்திய சிகிச்சைகளுக்காக அனுப்பப்படுகின்றனர். எனினும், திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தில் அவ்வாறு இலக்கிடப்பட்டு அமுல்படுத்தப்படாதிருந்துடன், நாளொன்றுக்கு 50 கிராம் வீதம் நீண்ட காலமாக வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டதுடன், அதில் எந்தவொரு செயல் முன்னேற்றமும் காண்பிக்காதிருந்த சிறுவர்களுக்காக ஏனைய மாற்று சிகிச்சைகளுக்காக அனுப்பப்படாதிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.7.3 திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தின் செயல்முன்னேற்றம்

40 வருட அளவிலான காலம் அமுல்படுத்தப்படுகின்ற திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தமை பின்வரும் அறிக்கை மற்றும் புள்ளி விபரங்கள் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

- உலகளாவிய பட்டினி குறிகாட்டி (புடழடியட ர்ரபெநச ஐனெநஒ) இலங்கை 84 ஆவது இடத்தில் காணப்படுகின்றமை. (யுஉஉழசனைபெ வழ ஐவெநசயெவழையெட குழழனள ீழடைஉல சுநளநயசஉா ஐெ ளவசரஉவரசந – ஐகுீசுஐ )

- ருஜேஊக்ஊ நிறுவனத்தினால் 2017 இல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பிரகாரம் இலங்கையில் 5 வயதிற்கு குறைவான சிறவர்களில் 1.்.5 பேர் மந்த போசணை நிலையில் வாழுகின்றமை அறிக்கையிடப்பட்டிருந்தது. 2006 – 2010 ஆகும் போது 13.3 சதவீதம் ஆக காணப்பட்ட அந்த மந்த போசணை நிலை, 2012 – 2016 வரையில் 21.4 சதவீதம் வரை உயர்வடைந்திருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரிபோஷா நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ளல் வெற்றிகரமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4 பரிந்துரை

4.1 தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உரிய பெறுகைத் திட்டங்கள் மற்றும் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.2 உள்நாட்டு ரீதியான மூலப்பொருட்கள் கிடைக்கின்ற போது உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்பட்ட மூலப் பொருட்கள்தான் வழங்குனர்களினால் வழங்கப்படுகின்றதா என பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்வதற்கான திட்ட முறையொன்றை தயாரித்தல்.

4.3 வழங்குனரை தெரிவு செய்யும் போது தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் புதிய வழங்குனர்களின் வழங்கலுக்காக மிகவும் ஆக்கபூர்வமான பிரிவுகளுடன் தொடர்புபடுத்துதல். மேலும், மூலப் பொருள் வழங்குனர்கள் புதிய வழங்குனராக இருக்கும் போது அந்த வழங்குனர்களின் செயற்பாட்டு சூழலில் திரிபோஷா கம்பனியின் தரச் சான்றுதழ் பிரிவினால் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை கம்பனியின் பெறுகை திட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்ததுடன், அந்த திட்டத்தின் பிரகாரம் வழங்குனர்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.4 வழங்குனர்களுடன் உடன்படிக்கை செய்யும் போது அமைச்சு பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற முழுமையான பெறுகைகளுக்காகவும் வழங்குனர்களுடன் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்தமை.

4.5 மூலப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது நிறுவனத்திற்கு சாதகமான விலைகளின் கீழ் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களுடன் கலந்துரயையாடி உடன்பாட்டிற்கு வருதல்.

4.6 சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகள் விரைவாக செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4.7 மூலப்பொருள் வழங்குனர்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளை வருடாந்தம் மீளாய்வு செய்து திரிபோஷா கம்பனியின் தரச் சான்றுதழ் பிரிவினால் முறையான பௌதீக களப் பரிசோதனைகளைச் செய்தல் மற்றும் களப் பரிசோதனை செய்வதன் மூலம் நியமங்களுக்கு புறம்பாக இருந்தமையை அறிவித்தல் மற்றும் அது தொடர்பாகவும் அறிக்கைகளை பேணிச் செல்லல்.

4.8 ளுடுளு 143 : 1999 நியமத்தின் 5.2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றாக கருதுதல் மற்றும் வெளியிடுதல் (நுநளபைெ யனெ டயலழரவ) உற்பத்தியின் தரத்தை பாதுகாக்கும் வகையில் திட்டமிடல்.

4.9 என்டர்சன் இயந்திரம், உலர வைத்தல் இயந்திரம் என்பன பொருத்தப்பட்டுள்ள பிரிவு மற்றும் சோயா தோற்களை அகற்றுகின்ற இயந்திரங்கள் என்பவற்றுக்கு இடையே காணப்படுகின்ற நுழைவு ∴ கதவுகள் உற்பத்தி மூலப் பொருள் நுழைவதை குறைக்கும் வகையில் அமைத்தல் மற்றும் முறையாக சுத்தப்படுத்துதல்.

4.10 திரிபோஷா செயற்பாடுகளில் சோளம் மற்றும் சோயா விதைகளை உள்ளடக்கிய ஏனைய மூலப் பொருட்கள் இயந்திரங்களுக்கு இடையே போக்குவரத்து செய்வதற்கு தற்போது திருகாணி (ளஉசநற) மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு பதிலாக புதிய தொழில்நுட்பங்களை உரித்தாக்கிக் கொள்ளும் அருகதையை பரீட்சித்தல்.

4.11 இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் உணவு உற்பத்தி, தயாரித்தல் வலையங்களை உள்ளடக்கும் வகையில் ஈடுகொடுக்கின்ற பாதுகாப்பு உடைகளை பயன்படுத்துதல்.

4.12 உற்பத்தியை பேணிச் செல்வதற்கு போதியளவான ஊழியர் எண்ணிக்கையொன்றை ஆட்சேர்த்தல்.

4.13 உற்பத்தி கிரயத்தை கட்டுப்பாட்டிற்கு உதவும் வகையிலான உற்பத்தி கிரயங்களை இனங்காணுதல், பகுப்பாய்வு செய்தல், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரய முறைமைகளை பயன்படுத்துதல் மற்றும் முறையான இருப்பு கட்டுப்பாட்டை பேணிச் செல்லல்.

4.14 உற்பத்தியின் குறைபாடுகள் ஏற்பட்டிருக்குமாயின் அதற்காக ஈடுபடுத்தப்பட்ட மூலப் பொருட்கள் அவற்றின் காலாவதியாகும் காலம், உற்பத்திக்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இலகுவாக இனங்காணக் கூடிய வகையில் உற்பத்தி இனங்காணும் முறைமையொன்றை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன், அக்குறியீட்டை திரிபோஷா பக்கட்டுக்களில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4.15 திரிபோஷாக்களின் நுண் போசணை உள்ளடக்கம் தொடர்பாக சர்வதேச நியதிகளின் பிரகாரம் திரிபோஷாக்களில் அடங்க வேண்டிய குறித்தி மூலக்கூறு உள்ளடக்கங்களை சரியாக பேணிச் செல்வதற்கும், நிரந்தரமாக தொடர்ச்சியான தரப்பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் அந்த போசணை மூலக்கூறுகளின் உள்ளடக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். மேலும், போசணை மேலதிகங்களை சேர்க்கும் போது திரிபோஷா அதற்குரிய தரத்தில் காணப்படுகின்றதா என கால ரீதியில் பரிசோதனை செய்ய வேண்டியிருந்ததுடன், உள்ளடங்க வேண்டிய போசணை மூலக்கூறுகளுக்குரிய மாதிரிகளுடன் ஒப்பிட்டு முரண்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.16 திரிபோஷா உற்பத்திற்குரிய மாதிரிகளுக்கு இணங்க போசணை மூலக்கூறுகள் மாத்திரம் உற்பத்தி செயன்முறைகளின் போது சேர்க்கப்பட வேண்டியிருந்ததுடன், அதில் அடங்கியுள்ள போசணை மூலக்கூறுகளை மாத்திரம் உறையில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.17 இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற நீர் சுத்திகரிக்கும் செயற்பாடுகளை நவீனமயப்படுத்துவதன் மூலம் ளுடுளு 614 : 2013 இன் பிரகாரம் குடிநீரில் அடங்க வேண்டிய ஆகக் கூடிய தடையற்ற அமோனியா அளவான லீட்டருக்கு 0.06 மில்லி கிராம் அளவிற்கு குறைக்கப்பட வேண்டும்.

4.18 திரிபோஷா மற்றும் சூபோஷா பூர்த்தி உற்பத்திகளை பொதியிடுவதற்கு முன் களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்துகின்ற மூன்று பைபர் கிளாஸ் (குடைநச படயளள)

தாங்கிகளுக்குப் பதிலாக உருக்கு இரும்பு தாங்கி ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்தல்.

4.19 பொதியிடல் இயந்திரத்தின் செயற்படுநிலைக்காக பொலித்தீன் பொருட்களை ஈடுபடுத்தும் போது இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் புநநெசயட ீசைெஉிடநள ழக குழழன ர்லபநைநெ (ளுடுளு 143:1999) நியமத்தின் பிரகாரம் இணங்கும் வகையில் பொலித்தீன் பயன்படுத்துதல்.

4.20 திரிபோஷாவின் பௌதீக பாதுகாப்பை பெறும் வகையிலும் திரிபோஷாவின் தரத்தை பாதுகாக்கும் வகையிலும் அதில் குறிப்பிடப்பட்ட காலாவதியான காலத்தில் அந்த உற்பத்திக்கு சேதம் ஏற்படாத வகையில் சுகாதார வைத்திய சேவைகள் உத்தியோகத்தர் அலுவலகங்களிலும், தாய் சேய் சிகிச்சை நிலையங்களிலும் திரிபோஷா களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

4.21 திரிபோஷா உற்பத்தியில் பொதுவான கழிவுகள் விலங்கு உணவிற்காக விற்பனை செய்யப்படும் வரை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு களஞ்சிய அறையொன்று பயன்படுத்தப்பட வேண்டும். (புறாக்கள் மற்றும் எலிகள் நுழையாத வகையில்)

4.22 திரிபோஷா நிறுவனத்தில் இருந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு திரிபோஷாவை கொள்கலன் வண்டி மூலம் போக்குவரத்து செய்யும் போது திரிபோஷா நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்ற இருப்புக்கள் மற்றும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு கிடைத்த இருப்புக்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை பேணிச் செல்லல் தொடர்பாகவும் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல்.

4.23 சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களிலும் சிகிச்சை நிலையங்களிலும் திரிபோஷா பகிர்ந்தளித்தல் மற்றும் உரிய ஆவணங்களை பேணிச் செல்லல் தொடர்பாகவும் உள்ளக கட்டுப்பாடொன்றை வலுப்படுத்துதல்.

4.24 உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்ற தரப்பினர்கள் (சுகாதார நிலைய உத்தியோகத்தர்கள், குடும்ப சுகாதார தாதியர்கள், திரிபோஷா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், சுகாதார அமைச்சின் திரிபோஷா சம்பந்தமான உத்தியோகத்தர்கள்) இற்கு சிறிய கையடக்க தொலைபேசி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை பரிமாரிக் கொள்ளும் திட்ட முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4.25 திரிபோஷா வழங்கப்பட்டதா எனவும் அதில் செயல்முன்னேற்றம் காணப்படுகின்றதா எனவும், மந்த போசணையுள்ள சிறுவர்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையானதாக வேறு விஷேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அமுல்படுத்துதல் மற்றும் ஏனைய போசணை மேலதிகத்தை வழங்குதல்.

4.26 ஐளுழு 22000 மற்றும் ர்யுஊஊீ என்ற தரச்சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு உரிய ஆலோசனை நிறுவனமான ஹெலியோன் தனியார் கம்பனி (ர்யடநலழெ ீசைஎயவந டுஅவைநன) 2017.03.15 ஆம் திகதி திரிபோஷா தொழிற்சாலைகளின் சுற்றாடல் பௌதீக ரீதியில் அவதானிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ள ஆரம்ப இடைவெளி அறிக்கையில்

(ஐவையைட புயி சுநிழசவ) உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து ஐளுழு 22000 மற்றும் ர்யுஊஊீ என்ற தரச்சான்றிதழை கூடிய விரைவில் பெற்றுக் கொள்ளல்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2020 டிசம்பர் 31

இணைப்பு - 01

**உற்பத்தி இலக்கை அடைதல்**

**உற்பத்தி(Kg)**

| மாதம் | பாதீடு | | | உள்ளபடியான | | | முரண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2017 | 2018 | 2019 | 2017 | 2018 | 2019 |
| சனவரி | 1,776,050 | 1,399,400 | 2,191,300 | 1,265,310.00 | 1,267,289.25 | 1,234,951.50 | 510,740.00 | 132,110.75 | 956,348.50 |
| பெப்ரவரி | 1 ,851,650 | 1,520,900 | 2,288,500 | 1 ,086,480.00 | 1,098,433.50 | 1,094,522.25 | 765,170.00 | 422,466.50 | 1,193,977.75 |
| மார்ச் | 1,927,250 | 1,585,700 | 2,482,900 | 1,332,426 .25 | 1,375,602.25 | 1,453,342.25 | 594,823.75 | 210,097.75 | 1,029,557.75 |
| ஏப்ரல் | 1,776,050 | 1,399,400 | 2,081,950 | 1,105,285.50 | 752,964.50 | 793,941.75 | 670,764.50 | 646,435.50 | 1,288,008.25 |
| மே | 2,069,000 | 1,650,500 | 2,179,150 | 1,180,947.25 | 1,352,572.75 | 1,238,005.50 | 888,052.75 | 297,927.25 | 941,144.50 |
| யூன் | 2,002,850 | 1,650,500 | 2,580,100 | 958,842.75 | 1,392,517.75 | 1,258,452.00 | 1,044,007.25 | 257,982.25 | 1,321,648.00 |
| யூலை | 2 ,078,450 | 1,715,300 | 2,677,300 | 1,240,005.75 | 1,380,606.50 | 1,150,191.50 | 838,444.25 | 334,693.50 | 1,527,108.50 |
| ஆகஸ்ட் | 2,040,650 | 1,682,900 | 2,555,800 | 1,348,334.00 | 1,137,908.50 | 1,505,699.00 | 692,316.00 | 544,991.50 | 1,050,100.00 |
| செப்தெம்பர் | 1,993,400 | 1,707,200 | 2,555,800 | 974,120.00 | 1,359,991.25 | - | 1,019,280.00 | 347,208.75 | N/A |
| ஒக்தோபர் | 2,059,550 | 1,707,200 | 2,555,800 | 749,471.50 | 1,426,29.25 | - | 1,310,078.50 | 280,900.75 | N/A |
| நவம்பர் | 1,993,400 | 1,642,400 | 2,373,550 | 1,372,773.50 | 1,284,822.50 | - | 620,626.50 | 357,577.50 | N/A |
| திசெம்பர் | 2 ,002,850 | 1,391,300 | 2,288,500 | 855,171.25 | 694,123.50 | - | 1,147,678.75 | 697,176.50 | N/A |
| மொத்தம் | 23,571,150 | 19,052,700 | 28,810,650 | 13,469,167.75 | 14,523,131.50 | 9,729,105.75 | 10,101,982.25 | 4,529,568.50 | 9,307,894.25 |

**களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்கள்**

**இணைப்பு - 02**

1. யாழ்ப்பாண மாவட்டம்
   - நாவலர் - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்
   - குருநகர் - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

2. வவுனியா மாவட்டம்
   - ரம்பேகுளம் - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்
   - பூந்தோட்டம் - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

3. கொழும்பு மாவட்டம்
   - ராஜகிரிய - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

4. கம்பஹா மாவட்டம்
   - ஜாஎல - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்
   - குட்கஹபொல - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்
   - மினுவாங்கொடை - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

5. காலி மாவட்டம்

   இந்துருவ - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

   அம்பலாங்கொடை - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

   பெந்தோட்டை அரசினர் வைத்தியசாலை

   பலப்பிட்டி தள வைத்தியசாலை

6. குருநாகல் மாவட்டம்

சந்தலங்கா மாவட்ட வைத்தியசாலை

பன்னல - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

7. களுத்துறை மாவட்டம்

வலல்லாவிட்ட - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

மீகஹதென்ன மாவட்ட வைத்தியசாலை

பெலவத்த தோட்ட வைத்தியசாலை

8. இரத்தினபுரி

கொடகவெல - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

பல்லபெத்த மாவட்ட வைத்தியசாலை

9. கண்டி மாவட்டம்

கலகெதர - சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்

இணைப்பு 03

**திரிபோஷா பகிர்ந்தளித்தல் மற்றும் நலனாளிகளை தெரிவுசெய்தல் தொடர்பான பொது சுற்றறிக்கை 01– 04/2016**

23/08 2019 10:34 FAX 0112237363 THRIPOSHA LTD 001

Attn: Dr. Shanthi Gunawardana

| | | |
|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephone | 2698 471<br>2698475<br>2698490 | |
| ෆැක්ස් / பெக்ஸ் / fax | 2693866 | |
| විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail | : postmaster@health.gov.lk | |
| www.health.gov.lk | | |

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය / எனது எண். / My No.

ඔබේ අංකය / உமது எண். / Your No.

දිනය / திகதி / Date 19.01.2016

සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதார, போசாக்கு மற்றும் சுதேசவைத்திய அமைச்சு
**Ministry of Health, Nutrition & Indigenous Medicine**

General circular No: 01 - 04 /2016

All Provincial Directors of Health Services,
Regional Directors of Health Services,
Directors/Medical Superintendents/Medical Officers In-Charge in Hospitals,
Heads of Institutions,

**Selection of Thriposha beneficiaries and distribution of Thriposha**

Thriposha is a highly nutritious supplementary food, distributed free of charge to pregnant & lactating mothers and undernourished children, in order to improve their nutritional status. Maize, Soya, full cream milk powder, vitamin and mineral premix are the ingredients of Thriposha.

The main objective of the Thriposha programme is to fulfill the nutritional requirements of the target group with nutritional deficiencies, which are not provided by the routine main meals. To achieve this programme objective, your co-operation is highly appreciated. Accordingly, please follow the below mentioned instructions to educate your staff.

**1. Selection of Thriposha beneficiaries**

1. All the pregnant mothers
2. All lactating mothers (during the first six months)
3. Undernourished children (from 6 months to five years)
   (a) Children whose weight for age lie below -2SD
   (b) Children with longstanding growth faltering (growth faltering in 3 consecutive months in the CHDR)
   (c) Children whose weights for height lie between -2SD and -3SD
   *Thriposha should be continued for another 3 months after their weight come to the normal range.
4. The above beneficiaries should receive Thriposha when they are hospitalized for long periods

**Important:**

- Children whose weight for length/height lies below -3SD should be referred to a paediatrician for therapeutic foods.
- Anyone other than the above categories is not considered as Thriposha beneficiaries.

The target groups who receive Thriposha as recommended do not need other supplementary food. As Thriposha is only a supplementary food, the beneficiaries should be encouraged to have a nutritious balanced diet (e.g. Main meals, complementary feeding with breast feeding).

**2. Thriposha distribution**

1. A beneficiary is entitled to 1500g (750g x 2 packets) of Thriposha per month (50 g per day)
2. The monthly stock receive to your institution should be properly stored and distributed to the beneficiaries as soon as possible.
3. To avoid spoilage and damage to Thriposha by rats, weevils, termites and other insects, it is necessary to provide clean and secure storage facilities until it is distributed to the beneficiaries.
4. Thriposha stocks should be issued methodically and old stocks should be issued first. New stocks should not be stored with spoiled or damaged bags. RDHS should be informed regarding the spoiled or damaged Thriposha bags and committee appointed by him should investigate and submit a report. Accordingly filled form General 47, should be sent to Sri Lanka Thriposha limited and obtain the permission from them to discard the stocks.
5. The monthly Beneficiary and Inventory Report (MBI) should be completed and sent to the Sri Lanka Thriposh Limited before 10th of the following month, in order to receive your next allocation.

Ministry of Health, Nutrition & Indigenous Medicine spends Rs 2500 million annually for the Thriposha programme. Hence, it is your duty and responsibility to implement this programme effectively to reduce the maternal and child malnutrition in Sri Lanka.

.......................

Dr. P.G Mahipala
Director General of Health Services

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Ven. Baddegama Wimalawansa Thero Mw.
Colombo 10.

**இணைப்பு 04**

**சுகாதார வைத்திய நிலையங்களினால் திரிபோஷா கையேற்றல் அறிக்கை சரியான பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமை.**



SRI LANKA THRIPOSHA LIMITED
MINISTRY OF HEALTH
THRIPOSHA DESPATCH AUTHORIZATION

T.D. A. / H No. 047020
DATE 02-Sep-2019

THE STORES EXECUTIVE
SRI LANKA THRIPOSHA LIMITED
KAPUWATTE, JA-ELA.

You are hereby authorised to despatch the undermentioned quantity of Thriposha to:

PART (A) STORES EXECUTIVE

TO MEDICAL OFFICER OF HEALTH
OFFICE OF THE MOH
MINUWANGODA

HEALTH STATION CODE T 0154
RAILWAY STATION COLLECTION

| COMMODITY | | TOTAL NUMBER MASTER BAGS | | No. OF PACKETS PER MASTER BAG | TOTAL No. OF PACKETS | TOTAL NUMBER MASTER BAGS (IN WORDS) |
|---|---|---|---|---|---|---|
| THRIPOSHA | M | 150 | 270 | 30 | 8100 | TWO HUNDRED SEVENTY ONLY |
| | C | 120 | | | | |

Signature of Director

FOR USE OF THRIPOSHA FINISHED GOODS STORES

Despatched / issued the above mentioned quantity of Thriposha bags

SIGNATURE TITLE DATE

CERTIFICATE OF RECEIPT BY HEALTH CENTRE

I hereby acknowledge receipt of the following Thriposha master bags :

IN NUMBERS IN WORDS DATE RECEIVED

Details of damages / losses

PART (C) HEALTH CENTRE

NAME SIGNATURE


TITLE DATE

NOTE FOR HEALTH CENTRE

The above quantity of Thriposha valued at Rs 971,697.60 has been allocated to you. When you receive the Thriposha, please complete the certificate of receipt above and send this entire form to : SRI LANKA THRIPOSHA LTD. P.O. BOX 17, JA-ELA The reverse of one copy of this form (do not tear off any portion) has been pre-addressed for your convenience, so that it can be folded and mailed without an envelope.

COPIES: 1. Health Centre (original for their file)
2. Finished Goods stores
3. Finished Goods stores
4. Health Centre (to be returned to Thriposha office)
5. Sri Lanka Thriposha Ltd.

**MBI அறிக்கையின் உள்ளபடியான இருப்பு மற்றும் எஞ்சிய உள்ளபடியான இருப்பு அறிக்கைகளில் குறிப்பிடப்படாமை**



THRIPOSHA MONTHLY BENEFICIARY & INVENTORY (MBI) REPORT

| Code Number | Month/Year | Name of Centre/ Estate | R.D.H.S Region | Province |
|---|---|---|---|---|
| T/154 | 2015 July | [illegible] | Gampaha | Western |

Beneficiary Report

| | Total Under Registration | No. Attended | No. Weighed | No. of Beneficiaries Received Thriposha | No. of Packets Issued | | |
|---|---|---|---|---|---|---|---|
| Ante Natal Mothers | 1747 | 1354 | 1370 | 1194 | 2388 | Ante Natal Mothers<18.5 BMI | 72 |
| Lactating Mothers | 1525 | 1150 | 695 | 965 | 1930 | Lactating Mothers with LBW Babies (<2.5Kg) | 60 |
| Infants (6-12 Months) | 1814 | 830 | 907 | 215 | 430 | Infants Below -2SD | 59 |
| Pre-School Children 1-2 Years | 2524 | 1570 | 1507 | 374 | 746 | Pre-School Children 1-2 Yrs below -2SD | 115 |
| Pre-School Children 3-5 Years | 6930 | 2652 | 2667 | 860 | 1720 | Pre-School Children 3-5 Years below -2SD | 312 |
| Ward Patients of the above categories for hospitals only | | | | | | | |
| Total | 14142 | 7566 | 7244 | 3607 | 7214 | Total | 557 |

Inventory Report

| | | Amounts in Packets Only |
|---|---|---|
| Balance Brought Forward (Last Month's closing balance) | A | 10459 |
| Quantity of Thriposha Received This Month | B | 5280 |
| No. of Bags Received | 270 | |
| T.D.A. Number | C1-577 | |
| Date Received | | |
| Total Thriposha Available A+B | C | 15739 |
| No. of Packets Distributed This Month | D | 7214 |
| Closing Balance C-D (to be carried forward next month) | F | 11524 |

| Current Approved Beneficiary Level | |
|---|---|
| Total Number of Clinics Held | 12 |
| Remarks by Health Center/ Estate | |

| Signature | Title | Date |
|---|---|---|
| [illegible] | | |